www.tamilarangam.net

# செம்பதாகை

*புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் தத்துவார்த்த ஏடு*

## இதழ் 7

ஒக்ற்றோபர் 2010

## இலங்கையில் புறக்கணிக்கப்படும் மலையகத் தமிழர்கள்

## ஸ்டாலின் பற்றிய பிரச்சனை மீது

## தமிழ்த் தேசியவாதவாதப் பார்வையும் குறுந்தேசியவாத வளர்ச்சியும்

**கவிதைகள்:** ***டெனிஸ் ஜூடாஸ், மணி***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ஆசிரியர் தலையங்கம்**

# மக்கள் முன்னாலுள்ள சவால்கள்

பொதுத் தேர்தல் மூலம் மேலும் வலிமையடைந்த அரசாங்கத்தின் நடவடிக்கை எதிலும் தேசிய இனப் பிரச்சனையைத் தீர்க்கும் நோக்கு இல்லை. மாறாகப், போராற் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படைத் தேவைகள் தொடர்ந்தும் மறுக்கப்படுகின்றன.

18வது அரசியல் யாப்புத் திருத்தம் புகுத்தப்பட்ட அவசரமும் அது முறையாக விவாதிக்கப்படாமையும் பாராளுமன்றச் சனநாயகத்தை நம்பும் எவருக்கும் அதிர்ச்சியும் ஏமாற்றமும் தருவன. பல-கட்சிச் சனநாயகம் என்ற பேரில் நடந்துவந்துள்ள நாடகம் முடிந்து, கட்சி அரசியலல்லாத தனிமனித, குடும்ப அதிகாரத்தை நோக்கி நாடு துரிதமாக நகருகிறது. போரில் அரசின் வெற்றி அதற்குப் பெரிதும் உதவியுள்ளது. எனினும், 1978ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின் நிறைவேற்றதிகாரச் சனாதிபதி முறையும் யாப்பின் துணையுடன் நடந்த கட்சித் தாவல்களுமே இன்றைய சூழலை இயலுமாக்கின.

நாட்டின் நிறைவேற்றதிகாரச் சனாதிபதிகளில் மோசமானவர் யாரென விசாரிப்பதோ ஆளோடாளை ஒப்பிடுவதோ நிலைமைகளை விளங்கிக்கொள்ள உதவாது. 1978ஆம் ஆண்டின் யாப்பினின்று வழி விலகாது நாட்டின் அரசியல் தொடருகிறது. அந்த யாப்பை முற்றாக ஒழிக்காது பேரளவிலான சனநாயகத்தையும் காப்பாற்ற இயலாது. எனவே, சனாதிபதி யார் என்பதை விட இன்றைய சனாதிபதி முறை தொடரலாமா என்பதே முக்கியமான கேள்வி.

சர்வாதிகாரத்தை நோக்கிய நாட்டின் நகர்வு யாரின் நலன்களைப் பேணுமென்பது முக்கியமானது. தனிமனித, குடும்ப, தலைமுறை வழி ஆட்சிகள், ஒரு தனிமனிதரதோ குடும்பத்தினதோ வம்சத்தினதோ அதிகாரமும் நலன்களும் பற்றியன மட்டுமல்ல. அதற்கும் மேலாகத் தேசிய, விதேசிய ஆளும் அதிகார வர்க்க நலன்கள் செயற்படுகின்றன. அதிகார வர்க்கங்கட்கு நாட்டை ஆளுவது யாரென்ற கவனம் இருப்பினும், தமது தெரிவு கிட்டாவிடின், தமது ஆதிக்க நோக்கங்கட்கும் நலன்கட்கும் கேடாக நடவாத அரசாங்கம் எதையும் அவை பொறுக்கக்கூடும். ஒவ்வொரு பெரு வல்லரசும் மேலாதிக்கச் சக்தியும் தனக்குச் சாதகமான ஆட்சியை நிறுவக் கடுமையாக முயலும். நிறுவ இயலாவிடின் ஆட்சியாளர் மீது நெருக்குவாரங்களைச் செலுத்தும்.

இன்றைய ஏகாதிபத்திய உலகமயமாக்கற் சூழலில், எந்த அந்நியக் குறுக்கீடும் ஒரு நாட்டினதும் மக்களினதும் நலன்கட்குக் கேடாகவே அமையும். வல்லரசுகட்கும் மேலாதிக்கங்கட்கும் எதிராக இணைவதன் மூலம், வலிமை குறைந்த நாடுகள் தம்மை ஓரளவுக்குத் தற்

www.tamilarangam.net

காக்க இயலும். மக்கள் தம்மைத் தற்காத்து ஒடுக்குமுறைகளிலிருந்து விடுதலை பெற, அவர்கள் ஒற்றுமையாகி ஒருங்கிணைவது அவசியம்.

மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் பொதுப் பண்புகளை உடையன. அவை ஒன்றை ஒன்று ஆதரிப்பன. எனவே விடுதலைக்கான போராட் டங்கள் ஒன்றை ஒன்று ஆதரிப்பது அவசியம். அதற்கு முன், அவை தமது பொதுப் பண்புகளை அடையாளம் காண்பதும் காணத் தடை யாக நிற்கும் மயக்கங்களை முறியடிப்பதும் அவசியம்.

நாட்டை எதிர்நோக்கும் சர்வாதிகாரம், இராணுவ வலிமை மீதும் அராஜகக் கும்பல்கள் மீதும் தங்கியிருக்கும் என்பது உறுதி. ஒரு சர்வாதிகாரத்தினிடத்தில் வரும் இன்னொரு சர்வாதிகாரம் முந்தியதன் அடக்குமுறையையே தொடரும் என்பதும் உறுதி. தமக்கு உடன் பாடாக நடக்கும் எந்த ஆட்சியினதும் அடக்குமுறைகள் எந்த வல்லர சுக்கும் மேலாதிக்கத்துக்கும் கவலை தருவதில்லை.

எனவே நாட்டின் பிரதான முரண்பாடாகத் தொடரும் தேசிய இனப் பிரச்சனையை நாட்டின் சனநாயக நெருக்கடியிலிருந்தோ ஏகாதிபத் திய உலகமயமாக்கலிலிருந்தோ பிரித்து நோக்க இயலாது. பழமை வாதத்தையும் ஏகாதிபத்தியச் சார்பு அரசியலையும் கொண்ட குறுந் தேசியவாதமும் பேரினவாதமும் பகையாகத் தோற்றங் காட்டினாலும் அவை ஒரே விதமான நலன்கட்காகவே செயற்படுகின்றன. இதைச் சகல தேசிய இனத்தவர்களும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

அந்தச் சிந்தனைத் தெளிவின் அடிப்படையில், ஒடுக்கப்படும் தேசிய இனங்களான தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்கள் தமது தேசிய இன உரிமைகட்கும் சுயநிர்ணயத்துக்குமான போராட்டங் களை ஒருமைப்படுத்துவதுடன் முழு நாட்டையும் பாதிக்கும் ஏகாதிபத் திய, அந்நிய மேலாதிக்க, பெருமுதலாளிய ஆதிக்கத்துக்கும் சுரண்ட லுக்கும் எதிரான போராட்டங்களுடன் இணைவு காண வேண்டும். அவ் வாறே, சிங்கள மக்கள் தமது ஏகாதிபத்திய, அந்நிய மேலாதிக்க, பெருமுதலாளிய விரோதப் போராட்டங்களில் சிறுபான்மைத் தேசிய இனத்தோர் இணையுமாறு அவர்களது சகல உரிமைப் போராட்டங் கட்கும் நிபந்தனையற்ற ஆதரவு வழங்க வேண்டும். இவை மக்களை எதிர் நோக்கும் உடனடியான பெரிய சவால்கள்.

எனவே நாட்டின் அனைத்துச் சனநாயக, முற்போக்கு, இடதுசாரிச் சக்திகளும் ஒன்றுபட்டுக் கலந்துரையாடித் தேசிய இனப் பிரச்சனை உட்பட நாட்டின் முக்கியமான பிரச்சனைகளின் தீர்வுக்கான குறைந்த பட்ச வேலைத் திட்டமொன்றை வகுத்து அதை முன்னெடுப்பதற்கான பரந்துபட்ட வெகுசன முன்னணியைக் கட்டியெழுப்புவது அவர்கள் தவிர்க்கவோ தவறவிடவோ கூடாத வரலாற்றுக் கடமையாகும்.

*****

www.tamilarangam.net

# இலங்கையில் புறக்கணிக்கப்படும் மலையகத் தமிழர்கள்

## ACR ஜோன்

இலங்கையில் பெருந்தோட்டத் தொழிற் துறையின் உழைப்புச் செயற்பாட்டுடன் பிரதானமாக தொடர்புபட்ட தமிழ் மக்களையே மலையகத் தமிழர்கள் என்று அழைக்கின்றோம். இவர்கள் 19ம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் தொட்டு 20ம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் வரையிலும் பிரித்தானியர்களின் கொலனி ஆட்சியின் போது தென்னிந்தியாவில் இருந்து —குறிப்பாகத் தமிழகத்தில் இருந்து— இலங்கைக்கு உழைப்பாளிகளாக அழைத்து வரப்பட்டனர். தமிழகத்தில் நிலவிய வறுமை, பஞ்சம், சாதிக் கொடுமைகள் ஆகிவற்றோடு நய வஞ்சகமாகப் பரப்பப்பட்ட பொய்ப் பிரசாரங்கள், போன்ற காரணிகளே அவர்கள் இலங்கைக்கு கூலிகளாய் வரக் காரணமாக அமைந்தன. இலங்கைக்கு அந்நியச் செலாவணி வருமானத்தை பெற்றுத் தருவதில் முக்கிய பங்கு வகிக்கின்ற பெருந்தோட்டத் தொழிற் துறையிற் பெரும் பான்மையான தொழிலாளர்களாகப் பணிபுரிகின்ற இச் சமூகத்தினர், இந் நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய சக்திகளாக இருக்கின்றனர். 1980கள் வரையிலும் இலங்கையினுடைய தேசிய ஏற்றுமதி வருமானத்தில் 60 சதவீதமான வருமானத்திற்கு மேல் தேயிலை, இறப்பர் போன்ற பெருந்தோட்டத் தொழிலில் இருந்தே கிடைத்து வந்தது. சமகாலத்தில் இலங்கையின் தேசிய வருமானத்தினைப் பெற்றுத் தருவதில் ஆடைத் தொழிற்சாலைகளும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களும் முன்னிலை வகிப்பதாக கூறப்பட்டாலும் இன்றும் ஏற்றுமதி வருமானத்தில் 13 சதவீதமான நிலையான பகுதி பெருந்தோட்டத் துறையில் இருந்து கிடைக்கின்றது என்பதனை மறுக்க முடியாது.

மலையகத் தமிழர்கள் மத்தியில் வளர்ந்து வந்த அரசியல், தொழிற் சங்க வளர்ச்சியையும் வர்க்க ரீதியான எழுச்சியையும் —குறிப்பாக

வளர்ந்து வந்த இடதுசாரி அரசியல் போன்றவற்றை— முடக்கும் நோக்கு டனேயே 1948ம் ஆண்டு இலங்கையின் பேரினவாதிகளதும் முதலாளித் துவ ஆதிக்க சக்திகளதும் சதியின் காரணமாக மலையகத் தமிழர்க ளின் குடியுரிமை பறிக்கப்பட்டு அவர்கள் அரசியல் அநாதைகளாக்கப் பட்டனர். இவ்வாறு இன்னும் பல்வேறு அடிப்படைகளில் ஒவ்வொரு வரலாற்றுக் காலகட்டத்திலும் மலையகத் தமிழர்களுக்கு எதிரான பல்வேறு அடக்குமுறைகள் நடந்திருக்கின்றன. மேலும் மலையகத் தமி ழர்களின் சனத்தொகை விகிதாசாரத்தினைக் குறைப்பதிலும் பேரின வாதிகள் திட்டமிட்டு செயற்பட்டுவந்துள்ளதுடன் அதில் வெற்றியும் கண் டுள்ளனர். குறிப்பாக 1960கள் வரையிலும் 10 சதவீதத்திற்கு அதிகமாக இருந்த மலையகத் தமிழர்களின் சனத்தொகை விகிதம் இன்று (அரசாங் கப் புள்ளிவிபரப்படி) 5.6 சதவீதமாக குறைந்துள்ளது.

மலையகத் தமிழர்களின் இருப்பும் பொருளாதாரக் கட்டமைப்பும் வாழ்வியல் பண்பாட்டு அம்சங்களும் உட்பட்ட அனைத்தும் பெருந் தோட்டத் துறையுடனேயே பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. 90 சதவீதத்திற்கு அதிகமான தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவிலிருந்து வஞ்சகமாக அழைத்துவரப்பட்ட மலையகத் தமிழர்களாகவே இருக்கின் றனர். உலகமயமாக்கலின் காரணமாக, உலகின் பல பாகங்களிலும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் தனியார்மயமாக்கப் படுகின்றன. அதே போன்று 1992ம் ஆண்டு அரசுக்கு சொந்தமாக இருந்த பெருந் தோட்டங்கள் 22 தனியார் கம்பனிகளுக்குக் குத்தகைக்கு வழங்கப் பட்டன. இதன் மூலம் பெருந்தோட்டங்களுடன் சேர்த்துத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வும் குத்தகையாகப்படடுள்ளது. இதன் மூலம் தோட்டத் தொழிலர்ளர்கள் தேசிய நீரோட்டத்தில் இருந்து புறக்கணிக்கப் படுகின்ற நிலை மேலும் அதிகரிக்கத் தொடங்கியது.

கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில், மலையகத் தமிழர்கள் மத்தி யில் கல்வி உட்படப் பல வாழ்வியல் அம்சங்களிற் சில முன்னேற் றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனாலும் ஒட்டுமொத்த இலங்கையிலும் பல்வேறு சமூக அபிவிருத்திக் குறிகாட்டிகளில் மலையகத் தமிழர்கள் —குறிப்பாகப் பெருந்தோட்டத் தொழிலாளர் சமூகம்— இன்றும் பின்னடை வாகவே இருப்பதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனைப் பின்வரும் சில விவரங்கள் எமக்குத் தெளிவாக உணர்த்தும்.

## பொருளாதார நிலை

மலையகத் தமிழர்களிற் பெரும்பாலானவர்கள் பெருந்தோட்டத் தொழிலா ளர்களாகவே இருக்கின்றனர். அவர்களுக்குக் கிடைக்கின்ற நாளாந்த வேதனத்தினைக் கொண்டுதான் வாழ்க்கையைக் கொண்டு நடத்த

வேண்டியுள்ளது. ஒட்டு மொத்த இலங்கையிலும் பெருந்தோட்டப் பகுதி களிலேயே வறுமைநிலை அதிகமாகக் காணப்படுவதாக அரசாங்கத் தின் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. 2006-2007ம் ஆண்டுக்கான இலங்கைக் குடிசனக் கணக்கீடு, புள்ளிவிவரத் திணைக்கள (Department of Census and Statistics) அறிக்கையின்படி பெருந்தோட்டப் பகுதியில் 32 சத வீதமானவர்கள் வறுமைநிலையில் இருப்பதாக கூறுகின்றது. அதே நேரம் வறுமைநிலை நகரப்புறங்களில் 6.7 சதவீதமாகவும் கிராமங்களில் 15.7 சதவீதமாகவும் இருக்கின்றது. இதன் அடிப்படையில், நகரங்களை விடக் கிராமங்களில் வறுமைநிலை இரண்டு மடங்கு அதிகமாகவும் கிராமங் களை விடப் பெருந்தோட்டப் பகுதிகளில் வறுமைநிலை இரண்டு மடங்கு அதிகமாகவும் காணப்படுகின்றது. மேலும், ஒட்டுமொத்த இலங்கையிலும் 15.2 சதவீதமானவர்கள் வறுமைக்குட்பட்டவர்களாக இருக்கையில் பெருந் தோட்டப் பகுதியில் அதைப்போல இருமடங்கு வறுமைநிலை காணப்படு கின்றது. மந்தபோசனை, சிசு மரண விகிதம் போன்ற குறைபாடுகளும் பெருந்தோட்டப் பகுதியிலேயே அதிகமாக இருக்கின்றன.

ஆனால் வறுமை ஒழிப்பிற்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப் படு கின்ற செயற் திட்டங்கள் பெருந்தோட்டப் பகுதி மக்களைச் சென்றடை யாத நிலையே தொடர்கின்றது. குறிப்பாக வறுமை ஒழிப்புச் செயற்திட்ட மாகிய ‘சமூர்தி’ செயற் திட்டத்தில் இருந்து பெருந்தோட்டப் பகுதி முற்றாகவே புறக்கணிக்கப்படுகின்றது. இதன் மூலம் கொடுக்கப் படுகின்ற உணவு மானியங்களையும் ஏனைய கொடுப்பனவுகளையும் பெருந்தோட்ட மக்கள் அனுபவிக்க முடியாத துர்ப்பர்க்கிய நிலை தொடர்கின்றது. ஆனாற் பெருந்தோட்டத் தொழிலாளர்கட்குப் போதியளவு வருமானம் கிடைப்பதாக நியாயப்படுத்தப்படுகின்றது.

மேலும், பெருந்தோட்டத் தொழிலர்ளர்கட்கு, தேயிலை இறப்பர் தோட்டங்களில் இருந்து கிடைகின்ற ஊதியத்திற்கும் மேலதிகமான வருமானத்தைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் இல்லை. குறிப்பாகத் தங்களுக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்வதற்குக் கூட நிலவுரிமை அற்றவர்களாகவே இருக்கின்றனர். இவ்வாறான பொருளா தாரப் பிரச்சினைகள் ஏனைய சமூக, பண்பாட்டு அம்சங்களின் வளர்ச்சி யைத் தடுக்கிறது. இலங்கையின் நகரங்களில் வாழுகின்ற செல்வந்தர் களின் வீடுகளில் வீட்டுவேலை செய்பவர்களாக மலையகத் தமிழர்களே உள்ளனர். இத் துறை, தொழில் உரிமைகளோ சமூக அந்தஸ்தோ கௌரவமோ அற்ற தொழிலாகவே இருக்கிறது. இருந்தும், பொருளாதார இடர்ப்பாடுகளின் காரணமாக, இத் தொழில்களைச் செய்வதற்கு நிர்ப்பந் திக்கப் படுகின்றார்கள். மேலும் இலங்கையில் சிறுவர் தொழிலாளர்களும் மலையகத் தமிழர்கள் மத்தியிலேய மிக அதிக எண்ணிக்கையில் இன்றும் இருந்து வருகின்றனர்.

## சுகாதார நிலை

இலங்கையைப் பொறுத்தவரை, அரச, மருத்துவ வசதிகளை ஒரளவேனும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு பொதுமக்களுக்கு உள்ளது. தெற்காசிய நாடுகளிலேயே சுகாதார வசதிகளில் இலங்கை சிறந்து விளங்குவதாக அரசாங்கம் பெருமைப்பட்டுக் கொள்கின்றது. ஆனாற் பெருந்தோட்டத் தொழிலாளர்களாகிய மலையகத் தமிழர்கள் நாட்டின் ஏனைய குடிகள் அனுபவிக்கின்ற அரசு பொது சுகாதார வசதிகளை அனுபவிப்பதில் பல்வேறு தடைகள் காணப்படுகின்றன. உடனடி மருத்துவ சேவைகளைப் பெறுவதற்குத் தோட்ட நிர்வாகத்தையே நாட வேண்டியிருக்கின்றது. ஆனால் தோட்ட நிர்வாகம் முறையான மருத்துவ சேவைகளை வழங்குவதில்லை என்பது வெளிப்படையான உண்மை.

பொதுவாகப் பெருந்தோட்டப் பகுதி மக்கள் அரசாங்கத்தின் மருத்துவ வசதிகளைப் பெறுவதற்குப் பல கிலோமீட்டர்கள் பயணிக்க வேண்டியிருக்கின்றது. மேலும் தோட்டங்களில் காணப்படுகின்ற வைத்தியசாலைகள் முழுமையாகத் தேசியமயமாக்கப் படவில்லை. சில மருத்துவமனைகளை அரசு பொறுப்பேற்றுள்ள போதும், பல மருத்துவமனைகள் இன்னமும் தோட்ட நிர்வர்கத்தின் கண்காணிப்பிலேயே இருக்கின்றன. அத்துடன் பெருந்தோட்டப் பகுதிகளில் இருக்கின்ற மருத்துவமனைகளில் முறையான வசதிகட்கும் தகுதிவாய்ந்த மருத்துவர்கட்கும் பற்றாக்குறை காணப்படுகின்றது. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நோய்வாய்ப்படுகின்ற போது நோயாளிகளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு அம்பியுலன்ஸ் வசதிகள் மிக அரிதாகவே காணப்படுகின்றன.

இவ்வாறன குறைபாடுகளின் காரணமாகப் பெருந்தோட்டப் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இரத்தச்சோகை, போசாக்கின்மை, வயிற்றோட்டம், மூளைக்காய்ச்சல் போன்ற நோய்கள் பெருந்தோட்டத் தொழிலாளர் சமூகத்தில் அதிகமாக இருப்பதுடன் கர்ப்பிணித் தாய்மார்களின் மரணமும் சிசு மரணமும் அதிகம் காணப்படுகின்றது. கடந்த மாதம் கூட பிரசவத்திற்கான ஒரு கர்ப்பிணித் தாயினை மருத்துவமனைக்கு லொரியில் கொண்டு சென்ற வழியிலேயே பிரசவம் நிகழ்ந்து குழந்தை பிறந்த கணமே உயிரிழந்த சோகச் சம்பவம் கண்டிக்கு அண்மையில் உள்ள புசல்லாவ பகுதியில் நடந்தது.

## காணி நில உரிமையற்ற சமூகம்.

இலங்கையின் முக்கியமானதொரு இனமாகிய மலையகத் தமிழர்களை அடிப்படையாகக் கொண்ட தோட்டத் தொழிலாளர் சமூகத்தினர் நில உரிமை இல்லாதவர்களர்கவே இருக்கின்றனர். நாட்டின் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகிக்கும் இவர்கள் நிலத்துக்கும் வீட்டுக்கும்

உரிமையற்றவர்களாக இருப்பது மிகப் பெரிய மனித உரிமை மீறல் என்பதை இலங்கை அரசாங்கம் உணர்ந்துள்ளது. பிரித்தானியர் காலத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கெனக் கட்டியமைக்கப்பட்ட லயன் அறைகளிலேயே கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளுக்குமேல் தொழிலாளர்கள் வசித்து வருகின்றனர். ஒரு வீட்டுக்குரிய அடிப்படை வசதிகள் இல்லாத 10' x 12' பரப்புடைய ஒரு அறையில்தான் அனைத்து வாழ்வியற் செயற்பாடுகளையும் செய்யவேண்டியுள்ளது. அதுவுங்கூடச் சட்டரீதியாகச் சொந்தமில்லாத நிலையே காணப்படுகின்றது. மேலும் அண்மைக் காலங்களில் தனிவீடுகள் கட்டிக்கொடுக்கப்பட வேண்டும் என்று அரசு கொள்கைரீதியாக ஏற்றுக்கொண்டுள்ள போதும், அதை முழுமையாக அமுல்படுத்தவில்லை. சில இடங்களில் தனிவீடுகள் கட்டிக்கொடுக்கப் பட்டாலும் அவற்றுக்கும் காணி உறுதிப் பத்திரம் வழங்கப்படவில்லை.

ஒரு ஜனநாயக நாட்டிலே உள்ளூராட்சி அமைப்புகளும் அதனுடன் தொடர்புடைய அரசு உறுப்புக்களுமே மக்களுடன் நேரடித் தொடர்புடையன. ஆனால் இந்த உள்ளூராட்சி அமைப்புகளின் சேவைகளைப் பெற முடியாத நிலையிலேயே தோட்டத் தொழிலர்ளர்கள் உள்ளனர். பெருந்தோட்டங்கள் அனைத்தும் கம்பனிகளின் கட்டுப்பட்டின் கீழ் இருப்பதனால் உள்ளூராட்சி அமைப்புகளின் சேவைகள் தோட்டத் தொழிலாளர்ளைச் சென்றடைவதில் சட்டரீதியான தடைகள் காணப் படுகின்றன. அண்மையில் தோட்டப் பகுதிகளில் சில அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தன் காரணமாக 'உட பலாத்த' என்ற பிரதேச சபை கலைக்கப்பட்ட மோசமான சம்பவம் நடைபெற்றது.

## கல்வி

கல்வியைப் பொறுத்தவரை, கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் மலையகத் தமிழ்ச் சமூகத்தில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதனை மறுப்பதற்கில்லை. இருந்த போதும் இலங்கையினுடைய ஏனைய இன மக்களுடன் ஒப்பிடுகையில் மலையகத் தமிழர்கள் இன்றும் பின்னடைந்தவர்களாகவே இருக்கின்றனர். இவ்வாறான பின்னடைவுக்கு வரலாற்று அடிப்படையிலான புறக்கணிப்பும் காரணமாக அமைகின்றது. 1944ம் ஆண்டு இலங்கையில் இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட போது, அத் திட்டத்தில் இருந்து தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் புறக்கணிக்கப்பட்டனர். 1970கள் வரையிலும் அவர்கள் கல்வி உரிமை மறுக்கப்பட்டவர்களாகவே இருந்தனர்.

மேலும், இன்று பாடசலைக் கட்டிடங்கள், சிரிபாத தேசிய கல்வியியற் கல்லூரி போன்ற கட்டமைப்பு வசதிகள் ஏற்படுவதற்கு சுவிடன் நாட்டின் சீடா, ஜெர்மன் நாட்டின் GTZ போன்ற நிறுவனங்களின் நிதி பங்களிப்பு

மிக முக்கியமானது. ஆசிரியர் தொழில் போன்ற அரசாங்க உத்தி யோகங்களில் கணிசமானளவில் மலையகத் தமிழர்கள் சேவையாற்றுகிற போதும் அரசாங்கத் துறைத் தொழில் வாய்ப்புக்களும் ஏனைய இட ஒதுக்கீடுகளும் இன விகிதாசார அடிப்படையில் வழங்கப்படுவதில்லை.

இன அடிப்படையிலும் வர்க்க அடிப்படையிலும் பல்வேறு ஒடுக்கு முறைகளுக்கு முகங்கொடுக்கின்ற மலையகத் தமிழர்களின் இருப்புக்கு உயிர்நாடியாக இருக்கக் கூடிய பெருந்தோட்டத் துறை இன்று புறக் கணிக்கப்படும் ஒன்றாகவே காணப்படுகின்றது. பல தோட்டங்கள் மூடப் பட்டும் கைவிடப்பட்டும் இருப்பதன் காரணமாக அதனை நம்பிருந்த தொழிலாளர்களின் நிலை கேள்விக்குறியாகியுள்ளது தோட்டங்கள் முறை யாகப் பராமரிக்கப்படாமையின் காரணமாக, உற்பத்தி பாதிக்கப் படுகின் றது. அதனால் தொழிலாளர்களே மிக மோசமாகப் பாதிக்கப் படுகின்ற னர். அத்துடன் தொழிலாளர்கட்கான தொழிற் பாதுகாப்பும் தொழில் அந்தஸ்தும் அற்ற நிலையில் பழைய அடக்குமுறையே கையாளப் படுவதவதனால் இச் சமூகத்திற்கு வரலாற்று அடிப்படையில் காணப் படுகின்ற கௌரவமற்ற நிலை தொடர்ந்து கொண்டுதான் உள்ளது.

மாறிமாறி ஆட்சிக்கு வருகின்ற முதலாளித்துவ பேரினவாத அரசாங் கங்கள் இச் சமூகத்தின் சமூக பொருளாதார அபிவிருத்தி குறித்துத் தொடர்ந்தும் அக்கறையற்றும் கண்டுகொள்ளாதும் உள்ள நிலையில் மலையத் தமிழர்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற அரசியல் பிரதிநிதிகள் போட்டிபோட்டுக்கொண்டு அரசாங்கத்தை ஆதரிக்கின்றனர். உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதற்கு மாறாக அமைச்சர் பதவி களைப் பெற்றுத் தம்மையும் தாம்சார்ந்த குடும்பத்தையும், உறவு களையும் வளர்த்துக்கொள்ளவே பார்க்கின்றனர். பல்வேறு உறுதி மொழி களை முன்வைத்து வாக்குக் கேட்கின்றனர். வெற்றிபெற்ற பின் சுய நலன்களுக்காக அரசாங்கத்தினை ஆதரிக்கின்றனர்.

மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வு மிக மோசமாகக் குறைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புக்கு மாறாக அற்பச் சலுகைகளுக்காக வாக்களிக்கும் நிலை வளர்ந்து வருகின்றது. அத்துடன் தொழிலாளர்கள் மத்தியில் சலுகைகளை எதிர்பார்த்து வாழும் நிலை அதிகரித்து வரு கின்றது. இம் மனநிலையை வளர்ப்பதில் அரசியல்வாதிகளும் என்.ஜீ. ஓக்களும் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். இந் நிலை வளர்வதற்கு இச் சமூகத்தில் இருந்து வளர்ந்து மேல் நிலைகண்ட சில கல்வியாளர்களும் முக்கிய காரணமாக இருக்கின்றனர். மேலும், கடந்த காலங்களில் இலங் கையில் உள்ள தொழிலாளர் வர்க்கத்திற்கே முன்னுதாரணமாக விளங் கக்கூடிய வகையில் மலையகத் தமிழர் மத்தியில் தொழிற் சங்கக் கட்டமைப்பும் போராட்டக் குணமும் காணப்பட்டது. ஆனால் இன்று இந்

www.tamilarangam.net

நிலை சிதைக்கப்பட்டுத் தொழிலாளர்கள் உதிரிகளாகும் நிலை வளர்ந்து வருகின்றது.

21ம் நூற்றாண்டிலும் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில், அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்டு, தோட்டக் கம்பனிகளின் அடக்கு முறைகளுக்கு உட்பட்டு வாழுகின்ற மலையகத் தமிழ்ச் சமூகத்தில் மாற்றங்கள் ஏற்படுவதற்குச் சலுகைகளை எதிர்பார்த்து வாழும் நிலை மைக்கு மாறாக உரிமைகளுக்காகக் குரல் எழுப்புகின்ற நிலை ஏற்பட வேண்டும். நீண்டகால அடிப்படையில் தெளிவான நோக்கமும் கருத் தியல் தெளிவும் செயற்பாட்டில் தீவிரமும் கொண்ட அமைப்புக்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். தொழிலாளர்கள் மத்தியில் அரசியல், உரிமை அடிப்படையிலான கருத்துக்கள் பதிக்கப்படுவது அவசியமானது.

மலையகத் தமிழர்கள் ஒரு தனியான தேசிய இனமாக அங்கீகரிக்கப் படுவதுடன் அதன் மூலமாக அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு அடிப்படையில் அனைத்து உரிமைகளையும் வென்றெடுப்பதற்கான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அத்துடன் இச் சமூகத்தின் இருப்புக்கு அடிப்படையாக இருக்கக்கூடிய பெருந்தோட்டத் துறை நவீனப் படுத்தப்படுவதுடன் தொழிலாளர்களின் தொழில் உரிமைகளும் கௌர வமும் உறுதிப்படுத்தப்படுவது உடனடித் தேவையாக இருக்கின்றது.

நீண்டகால அடிப்படையில் இச் சமூகத்தில் மாற்றங்கள் ஏற்படுவ தற்குப் பண்பாட்டு அடிப்படையிலான வேலைத்திட்டங்கள் ஒரு இயக்க மாக முன்னெடுக்கப்படுவதும் உடனடித் தேவையாகும். குறிப்பாகக் கூட்டு உழைப்பு, விடயங்களை மனந்திறந்து கலந்துரையாடுதல், கூட்டுறவு மனபாங்கு, தொழிலாளர்களிடையிலான உறவைப் பலப்படுத்தி விஸ்தரித்தல், சுய உற்பத்திப் பரிமாற்றம், முட நம்பிக்கைகளை ஒழிப்ப துடன் மக்கள் கலைகளிலும் வழக்காறுகளிலும் காணப்படுகின்ற போராட் டக் குணங்களையும் எதிர்புணர்வுகளையும் வளர்த்தெடுத்தல் போன்ற செயற்பாடுகள் அவசியமானவை. இவ்வாறான பண்பாட்டு எழுச்சி உறுதி செய்யப்படாவிடின் புதிய அரசியல் கட்டுமானத்தை உருவாக்குவது சாத்தியமற்றதாகி விடுவதுடன் அரசாங்கத்தால் இம் மக்கள் புறக்கணிக் கப்படும் நிலை மேலும் மோசமடைவது தவிர்க்க முடியாததாகி விடும்.

(*நன்றி: **தேடல்** சிறப்பிதழ், கனடா, 2010 செப்ற்றெம்பர்*)

*****

# ஸ்டாலின் பற்றிய பிரச்சனை மீது

**[சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய குழுவின் பகிரங்கக் கடிதத்தின் மீதான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டாவது விமர்சனம் – *"மக்கள் தினசரி", "செங்கொடி" நாளேடுகளின் ஆசிரியர் குழுக்கள், 13.09.1963*]**

ஸ்டாலின் பற்றிய பிரச்சனை உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளில் ஒன்றாக இருக்கிறது. அது ஒவ்வொரு நாட்டிலும் அனைத்து வர்க்கங்களிடையேயும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ள பிரச்சனையாகும். பல்வேறு வர்க்கங்களும் அவற்றின் அரசியற் கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் வெவ்வேறு கண்ணோட்டங்களில் இன்றைக்கு பெரும் விவாதத்திற்குள்ளாகிய ஒரு விடயமாக அது இருக்கின்றது. இந்தப் பிரச்சனைக்கு இறுதிமுடிவு இந்த நூற்றாண்டில் அடைய இயலாது எனத் தோன்றுகிறது. ஆனால் இப் பிரச்சனையில் சர்வதேச உழைக்கும் வர்க்கம் மற்றும் புரட்சிகர மக்களின் பெரும் பான்மையினரிடையே கிட்டத்தட்ட ஒரு ஏகோபித்த உடன்பாடு இருக் கிறது. அதாவது அவர்கள் ஸ்டாலினை முழுவதுமாக மறுப்பதை அங்கீகரிக்கவில்லை. மாறாக மேலும் மேலும் அவரது நினைவைப் போற்றிப் பேணி வளர்த்து வருகின்றனர். சோவியத் ஒன்றியத்தின் (Soviet Union) விடயத்திலும் இதுவே உண்மை. சோவியத் கம்யூ னிஸ்ட் கட்சித் தலைவர்களுடனான எங்களது கருத்து வேறுபாடு என்பது மக்களின் ஒரு பகுதியினருடனானதாகும். புரட்சிகர இலட் சியத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக அவர்களையும் இக் கருத் துக்கு இணங்கச் செய்துவிட முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்தக் கட்டுரையை எழுதுவதன் நோக்கம் இதுவே.

"*தனி நபர் வழிபாட்டை எதிர்ப்பது*" என்ற சாட்டில் தோழர் குருஷ் சேவ் ஸ்டாலினை முழுவதுமாக மறுத்த போது அவர் (குருஷ்சேவ்) மிகவும் தவறாகவும் உள்நோக்கம் கொண்டவராகவும் இருந்தார் என்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சி எப்போதும் கருதி வந்திருக்கிறது.

இந்த தனிநபர் வழிபாட்டை எதிர்த்த போராட்டம் என்பது தலைவர் கள், கட்சி, வர்க்கம், பொதுமக்கள் ஆகியோருக்கிடையிலான பரஸ்பர உறவு பற்றிய, முழுமை பெற்ற லெனினின் போதனைகளை மீறுவ தாகும் என்றும் ஜனநாயக மத்தியத்துவம் என்ற கம்யூனிசக் கொள்கை யின் அடிப்படைகளையே அழிப்பதாகும் என்றும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி ஜூன் 14 தேதியிட்டு தனது கடித்தில் சுட்டிக் காட்டியுள்ளது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய குழுவின் பகிரங்கக் கடிதம் கொள்கை வழிப்பட்ட எங்கள் வாதங்களுக்குப் பதில் எதுவும் சொல்வதைத் தவிர்க்கிறது. ஆனால் வெறுமனே சீனக் கம்யூனிஸ்ட் கட்சியைத் ''தனிநபர் வழிபாட்டின் ஆதரவாளர்கள்'', ''ஸ்டாலினுடைய தவறான கருத்துக்களைக் கூவி விற்பவர்கள்'' என்று முத்திரை குத்து கிறது.

மென்ஷெவிக்குகளை எதிர்த்துப் போராடியபோது லெனின் சொன் னார்: ''கொள்கை ரீதியான பிரச்சனையில் எதிராளியினுடைய ஒரு வாதத்திற்குப் பதில் சொல்லாமல் அவன் மீது பரிதாபம் காட்டுவதாகச் சொல்வது விவாதிப்பதாகாது. மாறாக அவதூறு செய்ய முயல்வது ஆகும்''.[1] சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி தனது பகிரங்கக் கடிதத்தில் காட்டியுள்ள மனப்பான்மையானது மென்ஷெவிக் குகளுடைய மனப்பான்மையுடன் துல்லியமாகப் பொருந்துவதாகும்.

பகிரங்கக் கடிதமானது விவாதத்திற்கு பதிலாக அவதூறு செய்வதை மேற்கொண்ட போதிலும் நாங்கள் கொள்கை ரீதியான விவரங்கள் மூலமாகவும் மறுக்க முடியாத உண்மைகள் மூலமாகவும் அதற்கு பதில் அளிக்க விரும்புகிறோம்.

மாபெரும் சோவியத் நாடு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் முதல் அரசாக இருந்தது. துவக்கத்தில் இந்த நாட்டின் அரசாங்கம் மற்றும் கட்சியின் தலைசிறந்த தலைவராக லெனின் இருந்தார். லெனினுடைய மறைவுக்குப் பின்னர் ஸ்டாலின் அவ்வாறு இருந்தார்.

லெனினுடைய மறைவுக்குப் பின்னர் ஸ்டாலின் சோவியத் யூனிய னின் கட்சி மற்றும் அரசாங்கத்தின் தலைவராக ஆனது மட்டுமன்றிச் சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட தலைவரும் ஆனார்.

ஒக்டோபர் புரட்சியினால் தொடங்கி வைக்கப்பட்ட முதல் சோசலிச அரசு தோன்றி 46 ஆண்டுகள்தான் ஆகின்றன. இதற் கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் இந்த அரசின் தலைசிறந்த தலைவராக ஸ்டாலின் இருந்தார். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்றிலுஞ் சரி, சர்வதேசக் கம்யூனிச இயக்க வரலாற்றிலுஞ் சரி, ஸ்டாலினுடைய செயற்பாடுகள் மிகவும் முக்கியமான இடத்தை வகிக்கின்றன.

ஸ்டாலினை எவ்வாறு மதிப்பிடுவது, ஸ்டாலினைப் பற்றி என்ன அணுகுமுறையை மேற்கொள்வது என்பது ஸ்டாலினை மட்டுமே மதிப்பிடும் ஒன்றல்ல, மிக முக்கியமாக, லெனினின் மறைவின் பின், சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தினதும் பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தினதும் வரலாற்று அனுபவங்களை எவ்வாறு தொகுப்பது என்ற

பிரச்சனையாகும் என்ற நிலைப்பாட்டைச் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது பேராயத்தில் தோழர் குருஷ்சேவ் ஸ்டாலினை முழுவதுமாக மறுதலித்தார். சர்வதேசக் கம்யூனிச இயக்கம் முழுவதையும் பாதிக்கக்கூடிய இந்தக் கொள்கை ரீதியான பிரச்சினையைப் பற்றி அவர் முன்கூட்டியே சகோதரக் கட்சிகளிடம் கலந்தாலோசிக்கத் தவறினார். ஆனால், பிறகு, அக் கட்சிகளின் மீது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒன்றைத் திணிக்க முயன்றார். சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் கருத்திலிருந்து மாறுபட்ட வகையில் ஸ்டாலின் பற்றிய மதிப்பீட்டுக்கு வந்தவர்கள் ‘‘தனிநபர் வழிபாட்டின் பாதுகாவலர்கள்’’ என்றும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் உள் விவகாரங்களில் தலையிடு பவர்கள் என்றும் வர்ணிக்கப்பட்டனர். ஆனால் முதல் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகார அரசின் வரலாற்று அனுபவத்தின் சர்வதேச முக்கியத்துவத்தையோ சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் தலைவராக ஸ்டாலின் இருந்தார் என்ற வரலாற்று உண்மையையோ யாரும் மறுக்க முடியாது. இதன் விளைவாக ஸ்டாலின் பற்றிய மதிப்பீடு சர்வதேச கம்யூனிச இயக்கம் முழுவதையும் பாதிக்கக்கூடிய ஒரு முக்கிய கொள்கைப் பிரச்சனையாகும் என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படியானால் பிற சகோதரக் கட்சிகள் ஸ்டாலினைப் பற்றிய யதார்த்தமான ஆய்வையும் மதிப்பீட்டையும் மேற்கொள்வதை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் எந்த அடிப்படையில் அனுமதிக்க மறுக்கிறார்கள்?

ஸ்டாலினுடைய நிறைகளையும் குறைகளையும் பற்றி முழுமையான விஞ்ஞானரீதியான ஆய்வை வரலாற்றுப் பொருள்முதல்வாத அடிப் படையில் மேற்கொள்ள வேண்டும் என்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வந்ததோடு, ஸ்டாலினை முழுவதுமாக மறுத லிக்கக்கூடிய அகவயமான பண்பாடற்ற கருத்துமுதல்வாத வரலாற்று ஆய்வு முறையையும் தான்தோன்றித்தனமான வரலாற்றுப் புரட்டலை யும் தொடர்ந்து எதிர்த்து வந்துள்ளது.

ஸ்டாலின் சித்தாந்த, சமூக, வரலாற்று வேர்களைக் கொண்ட தவறுகளைச் செய்தார் என்பதை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி இடை விடாது கூறி வந்துள்ளது. ஸ்டாலின் உண்மையாகவே புரிந்த தவறுகளை விமர்சிப்பது அவசியம். அடிப்படையில்லாமல் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றங்களை அல்ல. மேலும் ஒரு சரியான நிலைப் பாட்டில் இருந்து சரியான முறைகளில் அது செய்யப்பட வேண்டும். ஆனால் நாங்கள் ஸ்டாலின் பற்றிய முறையற்ற விமர்சனத்தையும் தவறான நிலைப்பாட்டில் இருந்து தவறான முறைகளில் செய்யப்படும் விமர்சனத்தையும் இடைவிடாது எதிர்த்து வந்துள்ளோம்.

லெனினுடைய வாழ்நாளில் ஸ்டாலின் ஜாரிசத்தை எதிர்த்துப் போராடினார். மார்க்சியத்தைப் பிரச்சாரம் செய்தார். லெனினின் தலைமையிலான போல்ஷெவிக் கட்சியின் மத்திய குழுவின் உறுப் பினரான பிறகு 1917 புரட்சிக்கு வழிவகுத்த போராட்டத்தில் பங்கெ டுத்துக் கொண்டார். ஒக்டோபர் புரட்சிக்கு பிறகு அவர் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் பலன்களை பாதுகாக்க போராடினார்.

லெனினின் மறைவுக்குப் பிறகு உள்நாட்டு வெளிநாட்டு எதிரிகளை எதிர்த்துத் தீர்மானகரமாகப் போராடுவதிலும் உலகின் முதல் சோசலிச அரசைப் பாதுகாப்பதிலும் உறுதிப்படுத்துவதிலும் சோவியத் கம்யூ னிஸ்ட் கட்சியையும் சோவியத் மக்களையும் அவர் வழி நடத்தினார்.

சோசலிச தொழில்மயமாக்கற் பாதை, விவசாயக் கூட்டுப்பண்ணை முறை ஆகியவற்றை உயர்த்திப்பிடிப்பதிலும் சோசலிச மாற்றம், சோச லிசக் கட்டுமானம் ஆகியவற்றில் பெரும் வெற்றிகளை ஈட்டுவதிலும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியையும் சோவியத் மக்களையும் அவர் வழி நடத்திச் சென்றார்.

பாசிச எதிர்ப்பு யுத்தத்தின் மாபெரும் வெற்றிக்கான கடுமையான நெடிய போராட்டத்தில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியையும் சோவியத் மக்களையும் சோவியத் ராணுவத்தையும் அவர் வழிநடத்திச் சென்றார்.

பல்வகையான சந்தர்ப்பவாதத்திற்கு எதிராகவும், ட்ரொட்ஸ்கியவாதி கள், ஜினோவியவாதிகள், புகாரின்வாதிகள் மற்றும் பிற முதலா ளித்துவ முகவர்கள் ஆகிய லெனினிய விரோதிகளுக்கு எதிராகவும் நடந்த போராட்டத்தில் ஸ்டாலின் மார்க்சிய லெனினியத்தைப் பாது காத்து வளர்த்தார்.

அழிக்க முடியாத மார்க்சிய லெனினியப் படைப்புகளாக விளங்கும் ஏராளமான கோட்பாட்டு ரீதியான படைப்புகள் மூலமாக ஸ்டாலின் சர்வதேசக் கம்யூனிச இயக்கத்திற்கு நிரந்தரமான பங்களிப்பை செய்துள்ளார்.

சீன மக்கள் உட்பட அனைத்து மக்களின் புரட்சிகர போராட்டங் களுக்குப் பெருமளவு உதவக் கூடிய பாட்டாளி வர்க்க சர்வதேசியத் திற்கு முற்றிலும் பொருந்திய அயலுறவுக் கொள்கையைக் கடைப்பிடிப் பதிலும் சோவியத் கட்சியையும் அரசாங்கத்தையும் ஸ்டாலின் வழி நடத்தினார்.

ஏகாதிபத்தியவாதிகளதும் அனைத்து எதிர்ப் புரட்சியாளர்களதும் இணக்கமற்ற எதிரியான ஸ்டாலின் அவர்களுக்கு எதிரான போராட் டத்தை வழி நடத்திச் செல்லும் வரலாற்றுப் பேரலையின் முன்னனியில் நின்றார்.

ஸ்டாலினுடைய நடவடிக்கைகள் மாபெரும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின், மாபெரும் சோவியத் மக்களின் போராட்டங்களுடன் மிக நெருக்கமாகவும் உலக முழுவதிலுமுள்ள மக்களின் புரட்சிகர போராட்டங்களுடன் பிரிக்க முடியாத வகையிலும் பிணைக்கப்பட்டிருக் கின்றன.

ஸ்டாலினுடைய வாழ்க்கை ஒரு மாபெரும் மார்க்சிய லெனினிய வாதியின் வாழ்க்கையாகும். ஒரு மாபெரும் பாட்டாளி வர்க்கப் புரட்சி யாளரின் வாழ்க்கையாகும்.

ஒரு மாபெரும் மார்க்சிய லெனினியவாதியும் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளருமாகிய ஸ்டாலின் சோவியத் மக்களுக்கும் சர்வதேச கம்யூனிச இயக்கத்திற்கும் மகத்தான பணி புரிந்துள்ள அதே வேளை, சில தவறுகளையும் செய்துள்ளார் என்பது உண்மையே. சில தவறு கள் கொள்கை ரீதியானவை; ஒரு சில தவறுகள் நடைமுறைப் பணிக ளின் போக்கில் இழைக்கப்பட்டவை; சில தவிர்த்திருக்கக் கூடியவை; பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் தனக்கு முன்னுதாரணமாகப் பின் பற்றிச் செல்ல எதுவும் இல்லாத காலத்தில் ஸ்டாலின் இழைத்த சில மிக அரிதாகவே தவிர்க்கப்பட்டிருக்க முடியும்.

தனது சிந்தனை முறையில் ஸ்டாலின் ஒரு சில பிரச்சனைகளில் இயக்கவியல் பொருள்முதல்வாதத்திலிருந்து விலகி இயக்க மறுப் பியல், அகநிலைப் போக்குக்கட்கு இரையானார். அதன் விளைவாகச் சில சமயங்களில் யதார்த்தத்திலிருந்தும் மக்களிடமிருந்தும் விலகிச் சென்றார். கட்சியின் உள்ளேயும் வெளியேயும் நடந்த போராட்டங் களில் ஒரு சில சமயங்களிலும் ஒரு சில பிரச்சனைகளிலும் இயல்பா கவே மாறுபட்ட இரண்டுவகையான முரண்பாடுகளை —அதாவது நமக்கும் எதிரிக்கும் உள்ள முரண்பாட்டையும் மக்களுக்கிடையே உள்ள முரண்பாட்டையும்— அவர் குழப்பிக் கொண்டார். மேலும் அவற்றைக் கையாளத் தேவைப்படும் வேறுபட்ட முறைகளையும் குழப் பிக் கொண்டார். ஸ்டாலின் எதிர்ப்புரட்சியை நசுக்குவதில் ஈடுபட்ட போது தண்டிக்கப்பட வேண்டிய பல எதிர்ப் புரட்சியாளர்கள் உரிய தண்டனையைப் பெற்றார்கள். அதே சமயத்தில் சில நிரபராதிகளும் தவறாகத் தண்டிக்கப்பட்டார்கள். 1937லும் 1938லும் எதிர்ப் புரட்சி யாளர்களை நசுக்குவதன் பரப்பை விரிவாக்கும் தவறு நிகழ்ந்தது. கட்சியும் அரச அமைப்புகளும் சம்பந்தப்பட்ட விடயங்களில் அவர் பாட்டாளிவர்க்க ஜனநாயக மத்தியத்துவத்தை முழுமையாகக் கடைப் பிடிக்கவில்லை. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அதை அவர் மீறினார். சகோதரக் கட்சிகள் மற்றும் நாடுகளது உறவுகளைக் கையாள்வதில் அவர் சில தவறுகளைப் புரிந்தார். சர்வதேச கம்யூனிச இயக்கத்திலும் அவர் சில தவறான ஆலோசனைகளை வழங்கினார். இத் தவறுகள்

சர்வதேச கம்யூனிச இயக்கத்திற்கும் சோவியத் நாட்டுக்கும் சில இழப்புக்களை ஏற்படுத்தின.

ஸ்டாலினுடைய தகுதிகளும் தவறுகளும் வரலாற்று ரீதியான புறநிலை யதார்த்த வகைப்பட்டவை. இரண்டையும் ஒப்பிடும்போது அவருடைய நிறைகள் அவருடைய குறைகளை விட மிகுதியானவை என்பதைக் காணமுடிகிறது. அவர் பிரதானமாகச் சரியானவராக இருந்தார். அவருடைய தவறுகள் இரண்டாம் பட்சமானவையாகவே இருந்தன. ஸ்டாலினுடைய சிந்தனைகளையும் பணிகளையும் ஒட்டு மொத்தமாகத் தொகுத்துப் பார்க்கும்போது ஒவ்வொரு நேர்மையான கம்யூனிஸ்ட்டும் சந்தேகத்திற்கு இடமின்றி வரலாற்றுக்கு மதிப்புக் கொடுத்து ஸ்டாலினிடம் இருந்த பிரதானமானவற்றை முதலில் கவனிப்பான். எனவே ஸ்டாலினுடைய தவறுகள் சரியான வகையில் மதிப்பிடப்பட்டு விமர்சிக்கப்பட்டு களையப்படும்போது ஸ்டாலினுடைய வாழ்க்கையில் பிரதானமாக இருந்தவற்றை பாதுகாப்பதும், அவர் பாதுகாத்து வளர்த்த மார்க்சிய லெனினியத்தைப் பாதுகாப்பதும் அவசியமாகும்.

இரண்டாம் பட்சமானவையாக மட்டுமே இருந்த ஸ்டாலினுடைய தவறுகள் வரலாற்றுப் படிப்பனையாக எடுத்துக் கொள்ளப்படுமாயின் அது பயனள்ளதாக இருக்கும். சோவியத் ஒன்றியத்தினதும் பிற நாடுகளதும் கம்யூனிஸ்டுகள் அத் தவறுகளை மீண்டும் இழைக்காமலிருப்பதற்கு அல்லது தவறுகளைக் குறைத்துக் கொள்வதற்கு இந்தப் படிப்பினைகள் எச்சரிக்கையாகப் பயன்படும். நேர்மறை, எதிர்மறையான வரலாற்றுப் படிப்பினைகள், அவை வரலாற்று உண்மைகளைத் திரித்துப் புரட்டாமலும், சரியாகத் தொகுத்தும், உறுதிசெய்யப்பட்டும் இருப்பின் அவை அனைத்து கம்யூனிஸ்டுக்களுக்கும் பயனுள்ளவையாக இருக்கும்.

பல தவறுகள் இருப்பினும், மாபெரும் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளராக இருந்த பெபல், ரோசா லுக்சம்பர்க் போன்றவர்களையிட்டு மார்க்சியவாதிகளின் அணுகுமுறை, இரண்டாவது அகிலத்தின் திரிபுவாதிகளுடனான அணுகுமுறையில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும் என்று லெனின் பல சமயங்களில் சுட்டிக்காட்டினார்.[2] மார்க்சியவாதிகள் அவர்களுடைய தவறுகளை மறைக்கவில்லை. மாறாக அத்தகைய உதாரணங்கள் மூலமாக ‘‘அவற்றை எவ்வாறு தவிர்ப்பது, புரட்சிகர மார்க்சியத்தின் கடும் தேவைகளுக்கு எவ்வாறு ஈடு கொடுப்பது’’ என்பதைக் கற்றுக்கொண்டார்கள். அதற்கு மாறாகத் திரிபுவாதிகள் பெபலினதும் ரோசா லுக்சம்பர்க்கினதும் தவறுகளைப் பற்றிக் ‘‘கூவினார்கள்’’ ‘‘கொக்கரித்தார்கள்’’. திரிபுவாதிகளைக் கேலி செய்த லெனின் இத் தெடர்பில் ஒரு சோவியத் பழங்கதையை மேற்கோள் காட்டினார். ‘‘சில சமயங்களில் கழுகுகள் கோழிகளைக் காட்டிலும்

தாழ்வாகப் பறக்கலாம். ஆனால் கோழிகள் ஒருபோதும் கழுகுகளின் உயரத் திற்குப் பறக்க முடியாது''.[3] பெபலும் ரோசா லுக்சம்பர்க்கும் ''மாபெரும் கம்யூனிஸ்டுகள்''. மேலும் அவர்களுடைய தவறுகளைச் செய்த போதும் ''கழுகுகளாகவே'' திகழ்ந்தார்கள். அதே சமயத்தில் திரிபுவாதிகள் ''உழைக்கும் வர்க்க இயக்கத்தின் கொல்லைப்புறச் சாணக் குவியலிடையே ''கோழிகளின்'' கூட்டமாக இருந்தனர். [4]

பெபலினதும் ரோசாலுக்சம்பர்க்கினதும் வரலாற்றுப் பாத்திரங்கள் எந்த வழியிலும் ஸ்டாலினுடைய பாத்திரத்துடன் ஒப்பிடப்பட முடியா தவை. ஸ்டாலின் ஒரு வரலாற்றுச் சகாப்தம் முழுவதும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தினதும் மற்றும் சர்வதேச கம்யூனிச இயக்கத் தினதும் மாபெரும் தலைவராக இருந்தார். அவரைப்பற்றி மதிப்பிடும் போது அதிக கவனம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

ஸ்டாலினைப் பாதுகாப்பதாக சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மீது சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் குற்றஞ் சாட்டுகிறார்கள். ஆம், நாங்கள் ஸ்டாலினைப் பாதுகாக்கவே செய்கிறோம். குருஷ்சேவ் வரலாற்றை திரித்து ஸ்டாலினை முழுவதுமாக மறுதலிக்கும் போது இயல்பாகவே நாங்கள் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் நலன்களை யொட்டி ஸ்டாலினைப் பாதுகாக்க வேண்டிய தவிர்க்க முடியாத வரலாற்றுக் கடமையை ஏற்றுள்ளோம்.

ஸ்டாலினை ஆதரிக்கும் போது சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அவருடைய சரியான பகுதியை ஆதரிக்கிறது. ஒக்டோபர் புரட்சியால் உருவாக்கப்பட்ட முதல் பாட்டாளி வர்க்க அரசின் புகழ் மிக்க வரலாற்றுப் போராட்டத்தை ஆதரிக்கின்றது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டத்தின் புகழ் மிக்க வரலாற்றை ஆதரிக்கின்றது. உலக முழுவதுமுள்ள உழைக்கும் மக்களிடையே சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் மதிப்பைப் பாதுகாக்கின்றது. சுருங்கக் கூறின், அது மார்க்சிய லெனினியக் கொள்கையையும் நடைமுறைகளையும் ஆதரிக் கிறது. சீனக் கம்யூனிஸ்டுகள் மட்டும் இதை செய்து கொண்டிருக்க வில்லை. மார்க்சிய லெனினியத்தின் மீது பற்றுறுதி கொண்ட அனைத் துக் கம்யூனிஸ்டுக்களும் உறுதி மிக்க அனைத்துப் புரட்சியாளர்களும் நேர்மையான உள்ளம் கொண்ட அனைத்து மக்களும் அதையே செய்து வருகிறார்கள்.

ஸ்டாலினை ஆதரிக்கும் வேளையில் நாங்கள் அவருடைய தவறு களை ஆதரிக்கவில்லை. நீண்ட காலத்திற்கு முன்பே சீனக் கம்யூ னிஸ்டுகள் ஸ்டாலினுடைய தவறுகளில் சிலவற்றின் நேரடி அனுப வத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஒரு சமயத்திலோ அல்லது இன்னொரு சமயத்திலோ சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் எழுந்த தவறான ''இடது'',

வலது சந்தர்ப்பவாதப் பாதைகளிற் சில ஸ்டாலினுடைய ஒரு சில தவறுகளின் தாக்கத்தினால் எழுந்தவை என்பது அப் பாதைகள் தோன்றுவதற்கான சர்வதேச அடிப்படை ஆகும். 1920ம் ஆண்டுகளின் பிற்பகுதியிலும் 30ம் ஆண்டுகளிலும் 40ம் ஆண்டுகளின் துவக்கத்திலும் நடுவிலும் தோழர்கள் மாஓ சேதுங், லியு ஷாஓசி ஆகியோர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட சீன மார்க்சிய லெனினியவாதிகள் ஸ்டாலினுடைய தவறுகளின் செல்வாக்கை எதிர்த்தனர். அவர்கள் படிப்படியாக இடது, வலது சந்தர்ப்பவாதப் பாதைகளைக் களைந்து இறுதியில் சீனப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச்சென்றனர்.

ஆனால் ஸ்டாலினால் முன்வைக்கப்பட்ட சில தவறான கருத்துக்கள் சீனத் தோழர்கள் சிலரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுக் பாவிக்கப்பட்ட தற்கான பொறுப்பினைச் சீனர்களாகிய நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். எனவே எங்களது கட்சி இடது, வலது சந்தர்ப்பவாதங்கட்கு எதிரான தனது போராட்டத்தில் தவறிழைத்த தனது சொந்த தோழர்களை விமர்சித்ததே தவிர ஒருபோதும் ஸ்டாலின் மீது பழியைப் போட வில்லை. தவறையும் சரியையும் பிரித்துப் பார்ப்பதும் தகுந்த படிப் பினைகளைக் கற்றுக் கொள்வதும் புரட்சிகர இலட்சியத்தை முன்னெ டுத்துச் செல்வதும் தான் எங்கள் விமர்சனத்தின் நோக்கமாக இருந் தது. நாங்கள் தவறிழைத்த தோழர்கள் தங்கள் தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டும் என்று மட்டுந்தான் கேட்டுக் கொண்டோம். அவர்கள் அவ்வாறு செய்யத் தவறியபோது, அவர்கள் தங்கள் ஒளிவு மறைவான, சீர்குலைவு நடவடிக்கைகளுக்காக ரகசிய குழுக்களை கட்டியமைக்காத அளவில், தங்கள் சொந்த நடைமுறை அனுபவத் தால் படிப்படியாகக் கற்றுக்கொள்ளும் வரை காத்திருந்தோம். எங்கள் முறை, உட்கட்சி விமர்சனமும் சுய விமர்சனமுங் கொண்ட சரியான முறையாகும். நாங்கள் ஐக்கியத்திற்கான விருப்பத்திலிருந்து தொடங்கி விமர்சனத்தினதும் போராட்டத்தினதுன் வழியாக ஒரு புதிய அடிப் படையிலான ஒரு புதிய ஐக்கியத்தை வந்தடைந்தோம். இவ்வாறு நல்ல விளைவுகள் பெறப்பட்டன. அந்த முரண்பாடுகள் மக்களுக் கிடையிலான முரண்பாடுகளே, எதிரிகளுக்கும் நமக்கும் உள்ள முரண்பாடுகள் அல்ல என்று நாங்கள் கருதினோம். எனவே மேற் கூறிய முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று நாங்கள் கூறினோம்.

தோழர் குருஷ்சேவும் பிற சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் களும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது காங்கிரசில் இருந்து ஸ்டாலினைப் பற்றி எத்தகைய மனப்பான்மையைப் பெற்றிருக்கிறார் கள்?

அவர்கள் ஸ்டாலின் வாழ்க்கையைப் பற்றியும், பணிகளைப் பற்றியும் ஒட்டுமொத்த வரலாற்று ரீதியான மற்றும் விஞ்ஞான ரீதியான

பகுப்பாய்வினைச் செய்யாமல், சரி தவறுகளை வேறுபடுத்திப் பார்க்காமல், அவரை முழுவதுமாக மறுதலித்துள்ளார்கள். அவர்கள் ஸ்டாலினை ஒரு தோழராக மதிக்கவில்லை. மாறாக ஒரு எதிரியாகப் பார்க்கிறார்கள்.

அனுபவங்களைத் தொகுப்பதற்கு அவர்கள் விமர்சன, சுயவிமர்சன முறையைக் கடைப்பிடிக்கவில்லை. மாறாக அனைத்துத் தவறுகட்கும் ஸ்டாலின் மீது குற்றம் சாட்டினார்கள். அல்லது தாங்கள் எழுந்த மானமாகக் கண்டு பிடித்த தவறுகளுக்கு ஸ்டாலினைக் காரணமாகக் குறிப்பிட்டார்கள்.

அவர்கள் உண்மைகளையோ, ஆதாரபூர்வமானவற்றையோ முன் வைக்கவில்லை. மாறாக, ஸ்டாலினுக்கு எதிராக மக்கள் மனதை நச்சுப் படுத்தும் பொருட்டு அவர் மீது கீழ்த்தரமான தனிப்பட்ட தாக்கு தல்களைத் தொடுத்தார்கள்.

குருஷ்சேவ் ஸ்டாலினை ஒரு ‘‘கொலைகாரன்’’ என்றும் ஒரு ‘‘குற்ற வாளி’’ என்றும் ஒரு ‘‘கொள்ளைக்காரன்’’[5] என்றும் ஒரு ‘‘சூதாடி’’ என்றும் ‘‘பொல்லாத இவான்’’ போன்ற ஒரு ‘‘கொடுங்கோலன்’’ என்றும் சோவியத் வரலாற்றிலே மிகப்பெரிய ‘‘சர்வாதிகாரி’’ என்றும் ஒரு ‘‘மடையன்’’[6] என்றும் ஒரு ‘‘முட்டாள்’’[7] என்றும் இன்ன பிறவன்ன சொற்களால் அவதூறு செய்தார். இத்தகைய அசிங்கமான, அவக்கேடான, வன்மம் மிக்க வார்த்தைகளை நாங்கள் சுட்டிக்காட்ட நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும் அதே சமயம் இது எங்கள் தாளையும் பேனாவையும் அசிங்கப் படுத்திவிடுமோ என்று அஞ்சுகிறோம். குருஷ் சேவ் ஸ்டாலினை சோவியத் வரலாற்றிலே மிகப்பெரிய ‘‘சர்வாதிகாரி’’ என்று அவதூறு செய்துள்ளார். அப்படியானால் சோவியத் மக்கள் முப்பதாண்டுக் காலம் சோவியத் வரலாற்றிலேயே மிகப் பெரிய சர்வாதிகாரியின் கொடுங்கோன்மையின் கீழ் வாழ்ந்தார்கள், சோசலிச அமைப்பின் கீழ் அல்ல என்று என்று இது பொருள்படவில்லையா? மாபெரும் சோவியத் மக்களும் உலக முழுவதுமுள்ள புரட்சிகர மக்களும் இந்தப் பழிச் சொல்லை முற்றிலும் மறுக்கிறார்கள்.

குருஷ்சேவ் ஸ்டாலினை (ரஷ்யாவை முன்பு ஆண்ட) ‘‘பொல்லாத இவான்’’ போன்ற ஒரு ‘‘கொடுங்கோலன்’’ என்று அவதூறு செய்துள் ளார். இது மாபெரும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும் மாபெரும் சோவியத் மக்களும் உலக முழுவதுமுள்ள மக்களுக்கு முப்பதாண்டு காலமாக வழங்கி வந்த அனுபவம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அனுபவமல்ல மாறாக ஒரு நிலப்பிரபுத்துவக் கொடுங்கோலன் ஆட்சி யில் பெற்ற அனுபவம் என்று பொருள்பட வில்லையா? மாபெரும் சோவியத் மக்களும் சோவியத் கம்யூனிஸ்டுக்களும் உலக முழுவது

முள்ள மார்க்சிய லெனினியர்களும் இந்தப் பழிச்சொல்லை முற்றிலும் மறுக்கிறார்கள்.

குருஷ்சேவ் ஸ்டாலினை ஒரு ‘‘கொள்ளைக்காரன்’’ என்று அவதூறு செய்துள்ளார். இது உலகின் முதலாவது சோவியத் அரசு நீண்ட காலமாக ஒரு கொள்ளைக்காரனால் தலைமை தாங்கப்பட்டு வந்தது என்று பொருள்படவில்லையா? மாபெரும் சோவியத் மக்களும் உலக முழுவதுமுள்ள புரட்சிகர மக்களும் இந்தப் பழிச்சொல்லை முற்றிலும் மறுக்கிறார்கள்.

குருஷ்சேவ் ஸ்டாலினை ஒரு ‘‘மடையன்’’ என்று அவதூறு செய்துள்ளார். வீரமிக்க புரட்சிகரப் போராட்டங்களை நடத்தியுள்ள சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி கடந்த பல பத்தாண்டுகளாக ஒரு மடையனைத் தனது தலைவராக கொண்டிருந்தது என்று இதனால் பொருள்படவில்லையா? சோவியத் கம்யூனிஸ்ட்டுகளும் உலக முழுவதுமுள்ள மார்க்சிய லெனினியர்களும் இந்த அவதூற்றை முற்றிலும் மறுக்கிறார்கள்.

குருஷ்சேவ் ஸ்டாலினை ஒரு முட்டாள் என்று அவதூறு செய்துள்ளார். இது பாசிச எதிர்ப்பு யுத்தத்தில் வெற்றியீட்டிய மாபெரும் சோவியத் ராணுவம் ஒரு முட்டாளை தனது தலைமைத் தளபதியாக கொண்டிருந்தது என்று பொருள்படவில்லையா? புகழ் பெற்ற சோவியத் கமாண்டர்களும் படைவீரர்களும் உலகின் பாசிச எதிர்ப்பு வீரர்கள் அனைவரும் இந்த அவதூற்றை முற்றிலும் மறுக்கிறார்கள்.

குருஷ்சேவ் ஸ்டாலினை ஒரு ‘‘கொலைகாரன்’’ என்று அவதூறு செய்துள்ளார். இது சர்வதேச கம்யூனிச இயக்கம் ஒரு கொலைகாரனைப் பல பத்தாண்டுகளுக்குத் தனது ஆசானாகக் கொண்டிருந்தது என்று பொருள்படவில்லையா? சோவியத் கம்யூனிஸ்டுகள் உட்பட உலக முழுவதுமுள்ள கம்யூனிஸ்டுக்கள் அனைவரும் இந்த அவதூற்றை முற்றிலும் மறுக்கிறார்கள்.

குருஷ்சேவ் ஸ்டாலினை ஒரு ‘‘சூதாடி’’ என்று அவதூறு செய்துள்ளார். இது புரட்சிகர மக்கள் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும், எதிர்ப்புரட்சிக்கு எதிராகவும் நடந்த போராட்டங்களில் ஒரு சூதாடியை முன்னணியாளனாகக் கொண்டிருந்தார்கள் என்று பொருள்படவில்லையா? சோவியத் மக்கள் உட்பட உலகின் அனைத்து புரட்சிகர மக்களும் இந்த அவதூற்றை முற்றிலும் மறுக்கிறார்கள்.

ஸ்டாலின் மீதான குருஷ்சேவின் இந்த அவதூறு மாபெரும் சோவியத் மக்களை ஒட்டு மொத்தமாக அவமதிப்பதாகும். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியை ஒட்டு மொத்தமாக அவமதிப்பதாகும். சோவியத் ராணுவத் திற்கும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்திற்கும் சோசலிச

அமைப்புக்கும் சர்வதேச கம்யூனிச இயக்கத்திற்கும் உலக முழுவதுமுள்ள புரட்சிகர மக்களுக்கும் மார்க்சிய லெனினியத்திற்கும் ஒட்டு மொத்தமான அவ மதிப்பாகும்.

இப்பொழுது அழுது புலம்பிக் கொண்டு மேசையைக் குத்தித் தனது உச்சஸ்தாயியில் ஸ்டாலின் மீது அவதூறு பொழிந்து கூப்பாடு போடும் குருஷ்சேவ் ஸ்டாலின் காலத்தில் அரசு மற்றும் கட்சியின் தலைமையில் அங்கம் வகித்தாரே, அப்படியானால் அவர் தனக்கு என்ன தகுதியை வழங்கிக் கொள்கிறார்? ஒரு கொலைகாரனின் அல்லது கொள்ளைக்காரனின் கூட்டாளி என்ற தகுதியையா? அல்லது மடையன் அல்லது முட்டாள் என்ற அதே தகுதியையா?

ஸ்டாலின் மீதான குருஷ்சேவின் இத்தகைய அவதூறுகளுக்கும் ஏகாதிபத்தியவாதிகள் பல்வேறு நாடுகளில் உள்ள எதிர்ப் புரட்சி யாளர்கள் கம்யூனிச கொள்கையை விட்டு ஓடிப்போனவர்கள் ஆகியோ ருடைய அவதூறுகளுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? ஸ்டாலின் மீது ஏன் இத்தனை கண் மூடித்தனமான வெறுப்பு? நீங்கள் ஏன் எதிரியை தாக்குவதைவிட மூர்க்கத்தனமாக அவரைத் தாக்குகிறீர்கள்?

ஸ்டாலினை அவதூறு செய்வதன் மூலம் குருஷ்சேவ் உண்மை யிலேயே சோவியத் அமைப்பு முறையையும் அரசையும் காட்டுத் தனமாகத் தூற்றுகிறார். இந்த விடயத்தில் அவருடைய வார்த்தைகள் எந்த விதத்திலும் பலவீனமானவை அல்ல. மாறாக கவுட்ஸ்கி, ட்ரொட் ஸ்கி, டிட்டோ, ஜிலாஸ் போன்ற ஓடுகாலிகளுடையதைக் காட்டிலும் உண்மையிலேயே கடுமையானவையாக இருக்கின்றன.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் பகிரங்கக் கடிதத்தின் கீழ்க்கண்ட பகுதியை மேற்கோள் காட்டி, மக்கள் குருஷ் சேவைக் கேட்க வேண்டும்: ‘‘மாபெரும் லெனினுடைய கட்சியைப் பற்றி, சோசலிசத்தின் தாயகத்தைப் பற்றி, ஒரு சோசலிசப் புரட்சியை நிறைவேற்றுவதில் உலகில் முதலாவதாக இருந்த மக்களைப் பற்றி, சர்வதேச ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் உள்நாட்டு எதிர்ப் புரட் சிக்கு எதிராகவும் நடந்த போராட்டங்களில் அதன் மாபெரும் சாதனை களை உயர்த்திப் பிடித்த மக்களைப் பற்றி, கம்யூனிசத்தைக் கட்ட மைக்கும் முயற்சியில் வீரசாகச அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டும், அர்ப்பணிப்பைக் காட்டிக்கொண்டும் இருக்கின்ற மக்களைப் பற்றி, உலக உழைக்கும் மக்களுக்கான தங்களின் சர்வதேசக் கடமையை நம்பிக்கையுடன் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற மக்களைப் பற்றி எப்படி அவர்களால் இவ்வாறு சொல்ல முடியும்?’’

அவதூற்றின் அரசியல் முக்கியத்துவம் என்ற கட்டுரையில் லெனின் கூறினார்: ‘‘அரசியல் அவதூறு பல சமயங்களில் சித்தாந்த ஒட்டாண்

டித்தனத்தையும் நிர்க்கதியையும் பேடித்தனத்தையும் அவதூறு கூறுப வனின் எரிச்சலூட்டும் பேடித்தனத்தையும் மூடிமறைத்து விடுகிறது''. ஸ்டாலினுடைய ஆவியினால் இடையறாது அலைக் கழிக்கப்படும் உணர்வைக் கொண்டிருக்கிற, ஸ்டாலினை அவமதிப்பதன் மூலம் தங்களது கொள்கை ஒட்டாண்டித்தனத்தையும் எரிச்சல் தரும் பேடித்தனத்தையும் நிர்க்கதியான நிலையையும் மூடிமறைத்துக் கொள்ள முயலுகிற சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கு இது பொருந்தாதா?

சோவியத் மக்களில் மிகப் பெரும்பான்மையினர் ஸ்டாலினை இவ்வாறு அவமதிப்பதை அங்கீகரிக்கவில்லை. அவர்கள் மேலும் மேலும் ஸ்டாலினுடைய நினைவைப் போற்றுகிறார்கள். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் மக்களிடமிருந்து தங்களை மிக மோசமாக தனிமைப் படுத்திக் கொண்டுவிட்டார்கள். அவர்கள் தாங்கள் ஸ்டாலினுடைய அலைக்கழிக்கிற ஆவியினால் பயமுறுத்தப் பட்டுக்கொண்டிருப்பதாக உணருகிறார்கள். உண்மையில் அது ஸ்டாலினை முழுவதுமாக மறுக்கும் செயல் மீது பெரும் அதிருப்தி கொண்டுள்ள பரந்துபட்ட மக்களின் பயமுறுத்தலாக இருக்கிறது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது பேராயத்தில் முன்வைக்கப் பட்ட ஸ்டாலினை முழுவதுமாக மறுக்கும் இரகசிய அறிக்கையை இதுவரை சோவியத் மக்களும் சோசலிச முகாமில் உள்ள பிற மக்க ளும் தெரிந்து கொள்வதற்காக வெளியிடும் துணிவு இல்லை. ஏனெ னில் அது உண்மையின் வெளிச்சத்தை தாங்க முடியாத மக்களை தீவிரமாக அந்நியப் படுத்திவிடக் கூடிய அறிக்கையாகும்.

சாத்தியப்பட்ட ஒவ்வொரு வழியிலும் ஸ்டாலினை இழிவுபடுத்தும் அதே வேளையில், சோவியத் கம்யூனிஸ்ட் தலைவர்கள் ஐசனோவர், கென்னடி மற்றும் அவர்களைப் போன்றவர்களை நம்பிக்கையுடனும் மரியாதையுடனும் போற்றுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.[8] அவர்கள் ஸ்டாலினை ''பொல்லாத இவானைப்'' போன்ற ஒரு கொடுங் கோலன் என்றும் சோவியத் வரலாற்றிலே மிகப் பெரிய சர்வாதிகாரி என்றும் இழிவு படுத்துகிறார்கள். ஆனால் ஐசனோவரையும் கென்னடி யையும் அமெரிக்க மக்களின் அறுதிப் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றவர்கள் என்று பாராட்டுகிறார்கள்.[9] அவர்கள் ஸ்டாலினை ஒரு மடையன் என்று இழிவு படுத்துகிறார்கள். ஆனால் ஐசனோவரையும் கென்னடியையும் விவேகமானவர்கள் என்று புகழ்கிறார்கள். ஒரு புறம், ஒரு மாபெரும் மார்க்சிய லெனினியவாதியை, ஒரு மாபெரும் பாட்டாளி வர்க்க புரட்சியாளனை, சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஒரு மாபெரும் தலைவனை, அவர்கள் கீழ்தரமான முறையில் தாக்கு கிறார்கள். மறுபுறம், ஏகாதிபத்தியத்தின் தலைவர்களை வானளாவப் புகழ்கிறார்கள். இந்த குறிப்பிடத்தக்க சம்பவங்களுக்கிடையிலான

உறவு மார்க்சிய லெனினியத்திற்கு துரோகமிழைத்ததன் தவிர்க்க முடியாத பின் விளைவாகத் தோன்றியது என்பதன்றி தற்செயலாக நிகழ்ந்தது என்று கருத ஏதேனும் வாய்ப்பு உண்டா?

குருஷ்சேவின் நினைவு குறுகியதாக இல்லாவிட்டால் அவர் 1937 ஜனவரியில் மொஸ்கோவில் நடந்த ஒரு மக்கள் அணிவகுப்பை நினைத்து பார்க்கட்டும். அந்த அணிவகுப்பில் ஸ்டாலினைத் தாக்கி யவர்களை குருஷ்சேவ் மிகச் சரியாகவே கண்டித்துப் பின்வருமாறு பேசினார்: ''தோழர் ஸ்டாலினுக்கு எதிராகக் கரம் உயர்த்துபவர்கள் நம் அனைவருக்கும் எதிராக உயர்த்துபவர்கள். உழைக்கும் வர்க் கத்திற்கும், மக்களுக்கும் எதிராகக் கரம் உயர்த்துபவர்கள். தோழர் ஸ்டாலினுக்கு எதிராகக் கரம் உயர்த்துவதன் மூலம் அவர்கள் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரது போதனைகளுக்கு எதிரா கக் கரம் உயர்த்துகிறார்கள்''. குருஷ்சேவ், தானே, ஸ்டாலினை மா பெரும் தோழர் லெனின் அவர்களின் நெருங்கிய நண்பர்[10], போராட் டத் தோழன் என்றும் ஒரு மாபெரும் மேதை, ஆசான், மனித குலத்தின் தலைவர்[11] என்றும் எப்பொழுதும் வெற்றியீட்டும் மாபெரும் ராணுவத் தளபதி[12] என்றும் மக்களின் உண்மையான நண்பன்[13] என்றும் தனது சொந்த தந்தை[14] என்றும் திரும்பத் திரும்பப் பல விதமாகப் புகழ்ந்துள்ளார்.

ஸ்டாலின் உயிரோடு இருந்த போது குருஷ்சேவ் கூறிய கருத்துக் களையும் ஸ்டாலின் இறந்த பிறகு குருஷ்சேவ் கூறிய கருத்துக் களையும் ஒருவர் ஒப்பிட்டு பார்த்தால் ஸ்டாலினைப் பற்றிய மதிப்பீட் டில் 180 பாகை தலைகீழாக அவர் மாறியிருப்பதை ஒருவர் காணாம லிருக்க முடியாது.

குருஷ்சேவ் ஞாபகசக்தி மிகவும் குறைவாக இல்லாதிருந்தால் அவர் நினைவு படுத்திப் பார்க்கட்டும். ஸ்டாலின் தலைமைக் காலத் தில் எதிர்ப் புரட்சியாளர்களை நசுக்குவதற்கு நடைமுறையிலிருந்த கொள்கையை ஆதரிப்பதிலும் கடைப்பிடிப்பதிலும் குருஷ்சேவ் தானே குறிப்பான சுறுசுறுப்புடன் செயல்பட்டார்.

1937 ஜூன் 6ம் நாள் மொஸ்கோ பிராந்தியத்தின் ஐந்தாவது கட்சி மாநாட்டில் குருஷ்சேவ் பிரகடனம் செய்தார். ''நமது கட்சி துரோகிக ளையும் காட்டிக்கொடுக்கும் கும்பல்களையும் ஈவிரக்கமின்றி நசுக்கும். ட்ரொட்ஸ்கிய வலது கழிசடைகள் அனைத்தையும் துடைத்தெறியும். அதற்கான உத்தரவாதம் நமது மத்திய கமிட்டியின் அசைக்கமுடியாத தலைமையாகும். நமது தலைவர் தோழர் ஸ்டாலின் அவர்களின் அசைக்க முடியாத தலைமையாகும். நாம் எதிரிகளை முழுவதுமாக

கடைசி மனிதன் வரை அழித்தொழித்து அவர்களுடைய சாம்பலைக் காற்றில் தூவிவிடுவோம்''.

1938ம் ஆண்டு ஜூன் 8ம் தேதி கீவ் பிராந்தியத்தின் நான்காவது கட்சி மாநாட்டில் குருஷ்சேவ் அறிவித்தார். ''யாக்யிர்கள், பால்யிட்ஸ்கி கள், லியுபெசென்கிகள், ஜாதொன்ஸ்கிகள் மற்றும் பிற கழிசடைகள் போலந்து நில உடைமையாளர்களை உக்ரேனுக்குள் கொண்டுவர விரும்பினர். ஜெர்மன் பாசிஸ்டுக்களையும், நிலப் பிரபுக்களையும், முதலாளிகளையும் இங்கே கொண்டு வர விரும்பினர். கணிசமான எண்ணிக்கையில் எதிரிகளை நாம் ஒழித்துக் கட்டியுள்ளோம். ஆயினும் இன்னும் எதிரிகள் அனைவரையும் ஒழித்துக் கட்டவில்லை. எனவே நாம் விழிப்புடன் இருப்பது அவசியம். முதலா ளித்துவ முற்றுகை இருக்கும்வரை உளவாளிகளும், அழிவு வேலைக் காரர்களும் நமது நாட்டுக்குள் திருட்டுத்தனமாக அனுப்பப்படுவார்கள் என்ற தோழர் ஸ்டாலினுடைய வார்த்தைகளை நாம் நெஞ்சில் உறுதி யாக நிறுத்திக்கொள்ள வேண்டும்.''

ஸ்டாலின் காலத்தில் கட்சி மற்றும் அரசின் தலைமையில் இருந்த குருஷ்சேவ் எதிர்ப்புரட்சியாளர்களை நசுக்கும் கொள்கையை ஆத ரித்து உறுதியாக நிறைவேற்றிய குருஷ்சேவ் அந்தக் காலத்தில் நடைபெற்ற எல்லாவற்றையும் ஏன் மறுத்துரைக்க வேண்டும்? தன்னை மட்டும் முற்று முழுக்க தூய்மையாக்கி காட்டிக்கொண்டு எல்லா தவறுகளுக்கும் ஸ்டாலின் மீது மட்டும் ஏன் பழியைச் சுமத்த வேண்டும்?

ஸ்டாலின் தவறான ஒன்றை செய்த போது அவர் தன்னைத்தானே விமர்சித்துக்கொள்ளும் தகுதியுடையவராக இருந்தார். உதாரணமாக சீனப் புரட்சிக்கு வழிகாட்டும் வகையில் சில தவறான அறிவுரைகளை அவர் வழங்கியிருந்தார். சீனப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு அவர் தனது தவற்றை ஒப்புக்கொண்டார். 1939ல் நடந்த சோவியத் கம்யூனிஸ்ட் (போல்ஷ்விக்) கட்சியின் 18வது காங்கிரசில் அவர் முன்வைத்த அறிக்கையில் கட்சி அணிகளை தூய்மைப் படுத்தும் பணியில் தான் செய்த தவறுகளில் சிலவற்றை ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் குருஷ்சேவ் என்ன செய்தார்? சுயவிமர்சனம் என்றால் என்ன என்பதையே அவர் கொஞ்சமும் அறியமாட்டார். அவர் செய்தது எல்லாம் அனைத்து பழியையும் மற்றவர்கள் மீது போட்டுவிட்டு சாதனைகள் அனைத்துக்கும் தானே சொந்தம் கொண்டாடியதுதான்.

நவீன திருத்தல்வாதம் வெறிகொண்டு திரியும் சமயத்தில் குருஷ் சேவின் இந்த அசிங்கமான நடவடிக்கைகள் நடந்ததில் ஆச்சரியம் இல்லை. மார்க்சியத்திற்கு துரோகம் இழைத்ததற்காக இரண்டாம் அகிலத்தின் சந்தர்ப்வாதிகளை விமர்சித்து 1915ல் லெனின் சொன்ன

தைப் போன்று “வார்த்தைகள் மறக்கப்பட்டுவிடும். கொள்கைகள் இழக்கப்பட்டுவிடும். தத்துவங்கள் தூக்கியெறிப்பட்டு விடும். அனைத்துத் தீர்மானங்களும் முறைப்படியான வாக்குறுதிகளும் கைவிடப்படும். இந்தக் காலத்தில் இது ஆச்சரியமளிப்பதாகவே இல்லை.”[15]

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை ஸ்டாலினை முழுமையாக மறுதலித்ததின் மிகக்கடுமையான பின்விளைவுகளை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது காங்கிரசுக்கு பிறகு நடந்த தொடர்ச்சியான நிகழ்ச்சிகள் முழுமையாக காட்டுகின்றன.

அது ஏகாதிபத்தியவாதிகளும் அனைத்து நாடுகளின் பிற்போக்காளர்களும் மிதமிஞ்சி வரவேற்கத்தக்க சோவியத் எதிர்ப்பு, கம்யூனிச எதிர்ப்பு தோட்டாக்களை வழங்கியுள்ளது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது காங்கிரசுக்குப்பிறகு வெகு குறுகிய காலத்திலேயே குருஷ்சேவின் ஸ்டாலின் எதிர்ப்பு ரகசிய அறிக்கையை சோவியத் நாட்டிற்கும் கம்யூனிசத்திற்கும் எதிராக ஒரு உலகுதழுவிய பேரலையை உசுப்பிவிட ஏகாதிபத்தியவாதிகள் பயன்படுத்திக் கொண்டார்கள். ஏகாதிபத்தியவாதிகளும், அனைத்து நாடுகளின் பிற்போக்காளர்களும், டிட்டோ கும்பலும், பல்வேறு ரகமான சந்தர்ப்பவாதிகளும், சோவியத் நாட்டை தாக்குவதற்கும், சோசலிச முகாமைத் தாக்குவதற்கும் கம்யூனிசக் கட்சிகளைத் தாக்குவதற்கும் இந்த வாய்ப்பைத் தாவிப் பிடித்துக்கொண்டார்கள். இவ்வாறு பல சகோதரக் கட்சிகளும் நாடுகளும் கடும் சங்கடங்களில் தள்ளப்பட்டன.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களால் ஸ்டாலினுக்கு எதிராக செய்யப்பட்ட வெறித்தனமான பிரச்சாரத்தினால் நீண்ட காலமாக அரசியல் சவங்களாக கிடந்த ட்ரொட்ஸ்கியவாதிகள் மீண்டும் உயிர் பெற்று ட்ரொட்ஸ்கிக்கு புனர்வாழ்வு கொடுக்க கூக்குரலிடுகின்றனர். 1961 நவம்பரில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 22வது பேராயத்தின் முடிவில் சொல்லிக் கொள்ளப்படும் நான்காவது அகிலத்தின் சர்வதேச செயலகம் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 22வது பேராயத்திற்கு அதன் புதிய மத்திய கமிட்டிக்கும் எழுதிய கடிதத்தில் ஸ்டாலினால் கொலை செய்யப்பட்டவர்களைக் கௌரவித்து ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப்படும் என்று 1937ல் ட்ரொட்ஸ்கி சொன்னார் என்று குறிப்பிட்டிருந்தது. அது மேலும் தொடர்ந்து “இன்று இந்த தீர்க்க தரிசனம் உண்மையாகியிருக்கிறது. உங்களது பேராயத்தின் முன்பு உங்கள் கட்சியின் முதல் செயலாளர் அந்த நினைவுச் சின்னத்தை நிறுவுவதாக உறுதியளித்துள்ளார்” என்று குறிப்பிட்டது. இந்தக் கடிதத்தில் ஸ்டாலினால் பலி கொள்ளப் பட்டவர்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் நிறுவப்படும் நினைவுச் சின்னத்தின் மீது ட்ரொட்ஸ்கியினுடைய பெயர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்

டும் என குறிப்பாகவே கோரப்பட்டுள்ளது. ட்ரொட்ஸ்கியவாதிகள் தங்கள் மகிழ்ச்சியை மறைக்கவில்லை. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி யின் தலைமையால் தொடங்கப்பட்ட ஸ்டாலின் எதிர்ப்பு பிரச்சாரம் ''ட்ரொட்ஸ்கியத்திற்கு கதவு திறந்து விட்டுள்ளது'' என்றும் ''ட்ரொட்ஸ் கியத்தையும் அதன் நிறுவனமான நான்காவது அகிலத்தையும் முன்னெடுத்துச் செல்வதற்கு மாபெரும் உதவியை செய்திருக்கிறது'' என்றும் அவர்கள் அறிவித் துள்ளார்கள்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் ஸ்டாலினை முழுவ துமாக மறுத்ததற்கு வெளியில் சொல்லமுடியாத உள்நோக்கம் இருக் கிறது.

ஸ்டாலின் 1953ல் இறந்தார். மூன்றாண்டுகளுப் பிறகு 20வது பேராயத்தில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் அவரை மூர்க்கத்தனமாக தாக்கினார்கள். அவர் மறைந்து எட்டு ஆண்டு களுக்கு பிறகு 22வது பேராயத்தில் மீண்டும் அதேபோல் செய்தனர். அவரது பூதவுடலை எடுத்து எரித்தனர். ஸ்டாலின் மீதான மூர்க்கத் தனமான தாக்குதலைத் திரும்பவும் தொடங்குவதன் மூலம் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் உலகெங்கிலுமுள்ள மக்கள் மத்தி யிலும் சோவியத் நாட்டில் உள்ள மக்கள் மத்தியிலும் அந்த மா பெரும் பாட்டாளிவர்க்க புரட்சியாளன் பெற்றுள்ள அழிக்க முடியாத செல்வாக்கினை துடைத்தெறிய முனைகிறார்கள். இதன் மூலம் திருத்தல்வாதப் பாதையை நடைமுறைப்படுத்துவதற்காக, ஸ்டாலின் பாதுகாத்து வளர்த்த மார்க்சிய லெனினியத்தை மறுத்துவிட முனை கிறார்கள். அவர்களுடைய திருத்தல்வாத பாதை குறிப்பாக 20வது பேராயத்தில் தொடங்கி 22வது பேராயத்தில் முழுமையாக முறைப்படுத்தப்பட்டுவிட்டது. ஏகாதிபத்தியம், யுத்தம், மற்றும் சமா தானம், பாட்டாளி வர்க்கப் புரட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், காலனி, அரைக்காலனி நாடுகளில் புரட்சி, பாட்டாளி வர்க்கக் கட்சி இன்னும் பிறவற்றின் மீதான மார்க்சிய லெனினிய கொள்கைகளை அவர்கள் திருத்தியது ஸ்டாலினை அவர்கள் முழுவதுமாக மறுதலித் ததுடன் பிரிக்க முடியாதபடி பிணைக்கப்பட்டிருப்பதை நிகழ்ச்சிகள் மேலும் தெளிவாகக் காட்டுகின்றன.

''தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது'' என்ற போர்வையில்தான் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை ஸ்டாலினை முழுவதுமாக மறுக்க முயற்சிக்கிறது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் தலைமை பற்றிய கொள்கைகளிலும் கட்சி வாழ்க்கையிலும் லெனினிய மரபுகளை மீட்ப தற்காக ''தனி நபர் வழிபாட்டை எதிர்த்த போராட்டத்தை'' தொடுக்க வில்லை. மாறாக அவர்கள் தலைவர்கள், கட்சி, வர்க்கம் மற்றும்

மக்களுக்கிடையேயான பரஸ்பர உறவுகள் பற்றிய லெனினிய போதனைகளை மீறுகிறார்கள். கட்சியில் ஜனநாயக மத்தியத்துவக் கொள்கைகளுக்கு எதிராக செயல்படுகிறார்கள்.

பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர கட்சி புரட்சிகரப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையகமாக உண்மையிலேயே பணியாற்ற வேண்டுமெனில் அது தலைவர்கள் ,கட்சி, வர்க்கம், மக்கள் ஆகியோருக்கிடையேயான பரஸ்பர உறவுகளைச் சரியாக கையாள வேண்டும். மேலும் ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று மார்க்சிய லெனினிய வாதிகள் வலியுறுத்தி வருகிறார்கள். அத்தகைய ஒரு கட்சி கிட்டத் தட்ட ஒரு ஸ்திரமான தலைமைக் கருக்குழுவைப் பெற்றிருக்க வேண்டும். அத் தலைமை மார்க்சிய லெனினிய சர்வ வியாபக உண்மையைப் புரட்சியின் பருண்மையான நடைமுறையுடன் இணைப்பதில் சிறந்தவர்களாக விளங்கும் புடம் போட்ட தலைவர்களடங்கிய ஒரு குழுவை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

பாட்டாளி வர்க்கக் கட்சியின் தலைவர்கள் அவர்கள் உள்ளூர் கமிட்டியைச் சார்ந்தவர்களாயினும் சரி, மத்திய கமிட்டியைச் சார்ந்தவர்களாயினும் சரி, வர்க்கப் போராட்டம் மற்றும் புரட்சிகர வெகுஜன இயக்கங்களின் போக்கில் மக்களிடமிருந்து தோன்றுகிறார்கள். அவர்கள் மக்களிடம் எல்லையற்ற விசுவாசம் கொண்டவர்கள். மக்களுடன் நெருக்கமான உறவை வைத்திருப்பவர்கள். மக்களின் எண்ணங்களைச் சரியான முறையில் ஒரு முனைப்படுத்தி அவற்றை செயற்படுத்துவதில் வல்லவர்கள். அத்தகைய தலைவர்கள் பாட்டாளி வர்க்கத்தின் உண்மையான பிரதிநிதிகள். மக்களால் அங்கீகரிக்கப் பட்டவர்கள். அத்தகைய தலைவர்களைப் பெற்றிருப்பது ஒரு பாட்டாளி வர்க்க கட்சியின் அரசியல் முதிர்ச்சியின் அடையாளமாகும். பாட்டாளி வர்க்க இலட்சியத்தின் வெற்றிக்கான நம்பிக்கை இதில்தான் இருக்கிறது.

லெனின் மிகச் சரியாகச் சொன்னார்: ‘‘வரலாற்றில் எந்தவொரு வர்க்கமும் தனது அரசியல் தலைவர்களை —ஒரு இயக்கத்தை கட்டி அதற்கு தலைமை தாங்கி வழி நடத்திச் செல்லக் கூடிய புகழ்பெற்றுச் சிறந்த தனது பிரதிநிதிகளை— உருவாக்காமல் அரசியல் அதிகாரத்தை வென்றதில்லை’’.[16] அவர் மேலும் சொன்னார் ‘‘அனுபவமிக்க பெரும் செல்வாக்கு பெற்ற கட்சி தலைவர்களை பயிற்றுவிப்பது என்பது நீண்ட காலம் பிடிக்கக்கூடிய கடினமான பணியாகும். ஆனால் இதில்லாமல் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் என்ற அதன் ஒன்றுபட்ட விருப்பம் என்பது ஒரு வெற்றுச் சொல்லாகவே இருக்கும்’’.[17]

வரலாற்றில் மக்கள், தனிநபர் ஆகியோரது பாத்திரம் மற்றும் தலைவர்கள் , கட்சி, வர்க்கம், மக்கள் ஆகியவற்றின் பரஸ்பர உறவு பற்றிய மார்க்சிய லெனினிய போதனைகளை எப்போதும் சீனக் கம்யூ னிஸ்ட் கட்சி பின்பற்றி வந்திருக்கிறது. கட்சியின் ஜனநாயக மத்தியத் துவத்தை உயர்த்திப் பிடித்திருக்கிறது. நாங்கள் எப்போதும் கூட்டுத் தலைமையை கடைப்பிடித்து வந்திருக்கிறோம். அதே சமயத்தில் தலைவர்களின் பாத்திரத்தை சிறுமைப்படுத்துவதை எதிர்க்கிறோம். தலைவர்களின் பாத்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் அதே வேளையில் தனி நபர்கள் நேர்மையற்ற முறையில் அளவுக்கு அதிக மாக புகழ்படுவதையும் அவர்களின் பாத்திரம் மிகைப்படுத்தப் படுவதையும் எதிர்க்கிறோம். 1949லேயே சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி தோழர் மாசேதுங்கின் ஆலோசனைப்படி கட்சி தலைவர்களின் பிறந்த நாட்களில் எந்தவிதமான பொது விழாக்கள் எடுப்பதையும் இடங்கள், தெருக்கள், நிறுவனங்களுக்கு அவர்கள் பெயர் சூட்டப்படுவதையும் தடைசெய்யும் ஒரு முடிவை எடுத்துள்ளது.

இந்த முரண்பாடற்ற சரியான எங்களுடைய அணுகுமுறை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையால் முன்வைக்கப்பட்ட தனி நபர் வழிபாட்டை எதிர்த்த போராட்டத்திலிருந்து அடிப்படையிலேயே மாறுபட்டதாகும்.

தனிநபர் வழிபாட்டை எதிர்த்த போராட்டத்தை முன்வைக்கும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களது நோக்கம் அவர்கள் கூறுவதைப் போல ஜனநாயகத்தை வளர்ப்பதோ, கூட்டுத்தலைமையை நடைமுறைப்படுத்துவதோ, தனிநபர் பாத்திரம் மிகைப்படுத்துவதை எதிர்ப்பதோ அல்ல. மாறாக அவர்களுக்கு வேறு உள் நோக்கங்கள் இருக்கின்றன. அவர்களின் தனிநபர் வழிபாட்டை எதிர்த்த போராட் டத்தின் உண்மையான சாரம்சம் என்ன?

ஒளிவுமறைவின்றிச் சொல்ல வேண்டுமானால் கீழ்கண்டவற்றைத் தவிர வேறொன்றுமில்லை.

1.தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது என்ற பெயரில் கட்சியின் தலைவரான ஸ்டாலினை கட்சி அமைப்புக்கும், பாட்டாளி வர்க்கத்திற்கும், பரந்துபட்ட மக்களுக்கும் எதிராக நிறுத்துவது.

2.தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது என்ற பெயரில் பாட்டாளி வர்க்கக் கட்சியையும், பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தையும், சோசலிச அமைப்பு முறையையும் களங்கப் படுத்துவது.

3.தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது என்ற பெயரில் தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்வது. மார்க்சிய லெனினியத்திற்கு விசுவாசமாக இருக்கும் புரட்சியாளர்களைத் தாக்குவது. அதன் மூலம்

திரிபுவாத சூழ்ச்சியாளர்களுக்கு கட்சி மற்றும் அரசு தலைமையைக் கைப்பற்ற பாதையமைத்துத் தருவது.

4.தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது என்ற பெயரில் தோழமைக் கட்சிகள் மற்றும் நாடுகளது உள்விவகாரங்களில் தலையிடுவது. அவற்றின் தலைமையை தமது வசதிக்கேற்ப கவிழ்க்க முயல்வது.

5.தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது என்ற பெயரில் மார்க்சிய லெனினியத்தை பின்பற்றும் சகோதரக் கட்சிகளைத் தாக்குவது. சர்வதேச கம்யூனிச இயக்கத்தை பிளவுபடுத்துவது.

குருஷ்சேவினால் தொடுக்கப்பட்டுள்ள தனிநபர் வழிபாட்டுக்கு எதிரான போராட்டம் என்பது ஒரு வெறுக்கத்தக்க அரசியல் சதிச் செயலாகும். மார்க்ஸால் வர்ணிக்கப்பட்ட ஒருவரைப்போல் "அவர் தன் இயல்பில் ஒரு சதிகாரர். அதே வேளையில் கோட்பாட்டாளன் என்ற முறையில் ஒரு அனாமதேயம்."[18]

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்க கடிதம் தனிநபர் வழிபாட்டை நிராகரித்து அதன் பின் விளைவுகளை எதிர்த்து போராடும் வேளையில் அவர்கள் தகுதி வாய்ந்த பெருமைக்குரிய தலைவர்கள் மீது உயர்ந்த மதிப்பை வைத்திருப்பதாகவும் குறிப்பிடுகிறது. இதன் பொருள் என்ன? இதன் பொருள் ஸ்டாலினை காலில் போட்டு மிதிக்கும் வேளையில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் குருஷ்சேவை வானளாவப் புகழ்கிறார்கள் என்பதாகும்.

ஒக்டோபர் புரட்சியின்போது இன்னும் ஒரு கம்யூனிஸ்ட் ஆகாமலும் உள்நாட்டு போரின்போது ஒரு கீழ்மட்ட அரசியல் பணியாளராகவும் இருந்த குருஷ்சேவை அவர்கள் செயலூக்கத்துடன் செம்படையை உருவாக்கியவர் என்று வர்ணிக்கிறார்கள். [19]

ஸ்டாலின்கிராட் போர்க்களத்தில் குருஷ்சேவின் குரலே அடிக்கடி கேட்டது என்றும்[20] அவர் ஸ்டாலின்கிராட்வாசிகளின் ஆன்மாவாகத் திகழ்ந்தார் என்றும்[21] சொல்லி அவர்கள் சோவியத் தேசபக்த யுத்தத்தின் தீர்மானகரமான மாபெரும் வெற்றிக்கு முழுவதுமாக குருஷ்சேவ் தான் காரணம் என்று குறிப்பிடுகிறார்கள்.

ஏவுகணை மற்றும் அணு ஆயுத தளவாடங்களில் ஈட்டிய மாபெரும் சாதனைகளுக்கு குருஷ்சேவ்தான் காரணம் என்று கூறும் அவர்கள் குருஷ்சேவை விண்வெளித் தந்தை[22] என்று அழைக்கிறார்கள். ஆனால் அணு மற்றும் ஹைட்ரஜன் குண்டுகள் தயாரிப்பதில் சோவியத் ஒன்றியம் அடைந்த வெற்றிகள் சோவியத் விஞ்ஞானிகள் தொழில் நுட்ப வல்லுநர்கள் மற்றும் சோவியத் மக்கள் ஸ்டாலின் தலைமையின் கீழ் சாதித்த மாபெரும் சாதனைகளாகும் என்பது

எல்லோரும் அறிந்ததே. ஏவுகணை உற்பத்திக்கான அஸ்திவாரங்கள் ஸ்டாலின் காலத்தில் போடப்பட்டவை. இந்த முக்கிய வரலாற்று உண்மைகளை எப்படி அழிக்க முடியும்? எல்லாப் பெருமைகளும் குருஷ்சேவுக்கு எப்படி சேரும்?

லெனினியம் காலாவதியாகிவிட்டது என்று கூறும் குருஷ்சேவை மார்க்சிய லெனினிய அடிப்படைக் கோட்பாடுகளை திரித்துப் புரட்டிய குருஷ்சேவை அவர்கள் மார்க்சிய லெனினியக் கொள்கையை ஆக்க பூர்வமாக வளர்த்துச் செழுமைப்படுத்திய புத்திக் கூர்மையுள்ள முன் மாதிரி என்று புகழ்கிறார்கள்.[23]

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது என்ற போர்வையில் செய்வது யாவும் லெனின் மிகச் சரி யாகச் சொன்னது போல "சாதாரண விடயங்களைப்பற்றி மிகச் சாதா ரணக் கண்ணோட்டங்களைக் கொண்டிருந்த பழைய தலைவர்களுக்கு பதிலாக இயற்கைக்கு அப்பாற்பட்டு முட்டாள் தனமாகவும் குழப்ப மாகவும் பேசுகிற புதிய தலைவர்களை முன்வைக்கிற" செயலே யாகும்.[24]

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்க கடிதம் மார்க்சிய லெனினியத்தை பின்பற்றும் எங்கள் நிலைப்பாட்டின் மீது அவதூறு செய்கிறது. "தனிநபர் வழிபாட்டுக் காலத்தில் திகழ்ந்து வந்த சித்தாந்தம் மற்றும் நெறிமுறைகள், தலைமைக்கான வடிவங்கள் மற்றும் முறைகள் ஆகிய, நடைமுறையில் இருந்தவற்றை பிற கட்சி கள் மீது திணிக்க முயல்வதாக" எங்கள் மீது அவதூறு கூறுகிறது. இந்தக் கூற்று தனிநபர் வழிபாட்டை எதிர்த்துப் போராடுவதன் முட்டாள்தனத்தை மீண்டும் அம்பலப்படுத்துகின்றது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களின் கூற்றுப்படி ஒக்டோபர் புரட்சி சோவியத் ஒன்றியத்தில் முதலாளித்துவத்திற்கு முடிவுகட்டிய பிறகு அங்கு ஒரு தனிநபர் வழிபாட்டுக் காலம் தொடங் கியது. அந்தக் காலத்தின் சமூக அமைப்பு முறையும் சித்தாந்த மற்றும் நெறிமுறைகளும் சோசலிசத்திற்கானவை அல்ல என்று தோன்றும். அந்தக் காலத்தில் சோவியத் உழைக்கும் மக்கள் ஒரு கனத்த சுமையினால் அழுத்தப்பட்டுக் கிடந்தார்கள். அங்கே மக்க ளுடைய வாழ்க்கையை நச்சுப்படுத்திய நிச்சயமின்மையும் சந்தேகமும் அச்சம் நிறைந்த சூழலும் நிலவியது. இவை சோவியத் சமுதாய வளர்ச்சியை தடை செய்தன.[25]

1963 ஜூலை 19ல் நடந்த சோவியத்-ஹங்கேரி நட்புறவு பேரணியில் குருஷ்சேவ் ஆற்றிய உரையில் "ஸ்டாலின் ஒரு கோடாரியைக்

கொண்டு தனது அதிகாரத்தை நிலை நிறுத்தினார்'' என்று கூறி ஸ்டாலினுடைய பயங்கர ஆட்சி பற்றிப் பேசினார். அந்தக் காலத்தின் சமூக நிலைமைகளை கீழ்கண்டவாறு வர்ணித்தார். ''அந்தக் காலத் தில் வேலைக்குச் செல்லும் ஒரு மனிதன் அடிக்கடி மீண்டும் வீட்டுக் குத் திரும்புவோமா தனது மனைவியையும் குழந்தைகளையும் மீண்டும் காண்போமா என்பதைப்பற்றி நிச்சயமற்றிருந்தான்''.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களின் வர்ணிப்புப்படி தனிநபர் வழிபாட்டுக் காலத்தில் சமுதாயம் நிலப்பிரபுத்துவம் அல்லது முதலா ளித்துவக் காலத்திலிருந்ததைவிட மிகவும் வெறுக்கத் தக்கதாகவும் காட்டுமிராண்டித்தனமாகவும் இருந்தது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களின் கூற்றுப்படி ஒக்டோபர் புரட்சியின் விளைவாக நிறுவப்பட்ட பாட்டாளிவர்க்க சர்வாதிகாரமும் சோசலிச சமூக அமைப்பு முறையும் உழைக்கும் மக்கள் மீதான ஒடுக்கு முறையை நீக்குவதற்கோ அல்லது சோவியத் சமுதாயத்தின் முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கோ பல பத்தாண்டுகள் தவறி விட்டன. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது பேராயம் தனிநபர் வழிபாட்டை எதிர்த்த போராட்டத்தை நிறைவேற்றிய பின்புதான் உழைக்கும் மக்கள் மீது இருந்த கனத்த சுமை அகற்றப்பட்டது. சோவியத் சமுதாயத்தின் வளர்ச்சி திடீரென்று துரிதப்பட்டது. [26]

குருஷ்சேவ் சொன்னார் ''ஆ! ஸ்டாலின் மட்டும் பத்து வருடங் களுக்கு முன்பே செத்திருந்தால்... !''[27] எல்லோருக்கும் தெரிந் ததுபோல் ஸ்டாலின் 1953ல் இறந்தார். பத்து வருடங்களுக்கு முன்பு என்பது 1943ஆக இருந்திருக்கும். அந்த ஆண்டுதான் சோவியத் நாடு மாபெரும் தேசபக்த யுத்தத்தில் எதிர்த் தாக்குதலை தொடங்கி யிருந்தது. அந்தக் காலத்தில் ஸ்டாலின் இறந்து போக வேண்டு மென்று விரும்பியது யார்? ஹிட்லர்!

சர்வதேச கம்யூனிச இயக்க வரலாற்றில் மார்க்சிய லெனினியத்தின் எதிரிகள் பாட்டாளி வர்க்க தலைவர்களைக் கொடியவர்களாகக் காட்டு வதும் தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது போன்ற முழக்கங்களைப் பயன் படுத்திப் பாட்டாளிவர்க்க இலட்சியத்திற்கு குழி பறிப்பதும் புதிய விடய மல்ல. நீண்ட காலத்திற்கு முன்பே மக்கள் கண்டுகொண்ட ஒரு அசிங் கமான தந்திரமே இது.

முதலாவது அகிலத்தின் காலகட்டத்தில் சதிகாரன் பக்கூனின் மார்க்ஸை வசைபாட இத்தகைய மொழியைத்தான் பயன்படுதினான். முதலில் மார்க்ஸின் நம்பிக்கையை பெறுவதற்கு புழுவைப்போல் நெளிந்து ''நான் உங்கள் சீடன். அதற்காக நான் பெருமைப் படுகிறேன்''[28] என்று எழுதினான். பிறகு முதலாவது அகிலத்தின்

தலைமையைக் கைப்பற்றுவதற்கான தனது சதியில் தோல்வியுற்ற அவன் மார்க்ஸை வசைபாடினான். ‘‘ஒரு ஜேர்மானியனும் யூதனுமான அவன் அடியிலிருந்து முடிவரை ஒரு எதேச்சாதிகாரி’’ [29] மற்றும் ‘‘ஒரு சர்வாதிகாரி’’ [30] என்றும் சொன்னான்.

இரண்டாவது அகிலத்தின் காலகட்டத்தில் லெனினை வசைபாட ஓடுகாலி கவுத்ஸ்கி இதே மாதிரி மொழியைத்தான் பயன்படுத்தினான். ‘‘ஒரு அரசாங்க மதத்தின் தரத்திற்கு மட்டுமல்ல,[31] மாறாக ஒரு மத்தியக்கால அல்லது கிழக்கத்திய (மதத்தின்) மூடநம்பிக்கையின் தரத்திற்கு மார்க்சியத்தை குறுக்கிவிட்ட ஏகக்கடவுள் கொள்கையினரின் கடவுள்’’ [32] என்று லெனினை பழித்துக் கூறினான்.

மூன்றாவது அகிலத்தின் காலகட்டத்தில் ஸ்டாலினை வசைபாட ஓடுகாலி ட்ரொட்ஸ்கி இதேமாதிரி மொழியைத்தான் பயன்படுத்தினான். ஸ்டாலினை ஒரு கொடுங்கோலன்[33] என்றும் ஸ்டாலினிய அதிகார வர்க்கம் தலைவர்களுக்கு தெய்வீக குணாம்சங்களை சூட்டும் ஒரு இழிவான தலைவர் வழிபாட்டை உருவாக்கிவிட்டது[34] என்றும் கூறினான்.

நவீன திரிபுவாத டிட்டோ கும்பலும் ஸ்டாலினை வசைபாட இதே மொழியை பயன்படுத்துகிறது. ஸ்டாலின் முற்று முழுக்க தனிநபர் அதிகாரத்தை கொண்ட ஒரு அமைப்பு முறையில் சர்வாதிகாரியாக இருந்தார் என்று கூறுகின்றது. [35]

இவ்வாறு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையினால் எழுப்பப்பட்டுள்ள தனிநபர் வழிபாட்டை எதிர்க்கும் போக்கு பாட்டாளிவர்க்க தலைவர்களைத் தாக்கவும் பாட்டாளிவர்க்க புரட்சிகர இயக்கத்திற்கு குழிபறிக்கவும் பக்கூன், கவுத்ஸ்கி, ட்ரொட்ஸ்கி மற்றும் டிட்டோ போன்ற அனைவரும் பயன்படுத்தியதுதான் என்பது தெளிவாகிறது.

சந்தர்ப்பவாதிகள் சர்வதேச கம்யூனிச இயக்க வரலாற்றில் மார்கஸ், எங்கெல்ஸ் அல்லது லெனினை வசைபாடுவதன் மூலம் அவர்களை மறுதலிக்க முடியவில்லை. குருஷ்சேவினாலும் வசைபாடுவதன் மூலம் ஸ்டாலினை மறுதலிக்க முடியாது.

லெனின் சுட்டிக்காட்டியது போல உயர்ந்த பதவி இழிவுபடுத்தலின் வெற்றியை உறுதிப்படுத்த முடியாது.

லெனின் அருங்காட்சியகத்திலிருந்து ஸ்டாலினுடைய உடலை அப்புறப்படுத்த குருஷ்சேவ் தனது உயர்ந்த பதவியை பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. ஆனால் அவர் எவ்வளவுதான் முயன்றாலும் உலகெங்குமுள்ள மக்கள் மனதிலிருந்தும் சோவியத் மக்களின் மனதி

லிருந்தும் ஸ்டாலின் மீதான மாபெரும் பற்றுதலை நீக்குவதில் ஒரு போதும் வெற்றிபெற முடியாது.

மார்க்சிய லெனினியத்தை ஒரு வழியிலோ அல்லது இன்னொரு வழியிலோ திரித்துப் புரட்டுவதற்கு குருஷ்சேவ் தன்னுடைய உயர்ந்த பதவியைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆனால் அவர் என்ன தான் முயன்றாலும் உலகெங்குமுள்ள மார்க்சிய லெனினியவாதிக ளால் பாதுகாக்கப்பட்ட, ஸ்டாலினால் பாதுகாக்கப்பட்ட மார்க்சிய லெனினியத்தை தூக்கியெறிவதில் ஒருபோதும் வெற்றியடைய முடியாது.

நாங்கள் தோழர் குருஷ்சேவுக்கு அக்கறையுடன் ஒரு அறிவுரை கூற விரும்புகிறோம். நீங்கள் உங்கள் தவறுகளை உணர்ந்து கொண்டு தவறான பாதையிலிருந்து மார்க்சிய லெனினியப் பாதைக்கு திரும்பி வருவீர்கள் என நம்புகிறோம்.

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரது மாபெரும் புரட்சிகரப் போதனைகள் வாழ்க!

**குறிப்புக்கள்**

[1] V. I. Lenin, "Some Remarks on the 'Reply' by P. Maslov", *Collected Works*, Eng. ed., FLPH, Moscow, 1963, Vol. XV, p. 255.

[2] V. I. Lenin; "Preface to the Pamphlet by Voinov (A. V. Lunacharsky) on the Attitude of the Party Towards the Trade Unions", *Collected Works*, Eng. ed., FLPH, Moscow, 1962, Vol. XIII, p. 165.
[3] V. I. Lenin, "Notes of a Publicist", *Selected Works*, Eng. ed., International Publishers, New York, 1943, Vol. X, p. 312.
[4] *மேலது*, p. 313.

[5] N. S. Khrushchov, Conversation with the Delegation of the Chinese Communist Party, October 22, 1961.

[6] N. S. Khrushchov, Speech at the May Day Reception of 1962. Given by the Soviet Government.

[7] N. S. Khrushchov, Conversation with the Delegation of the Chinese Communist Party, October 22, 1961.

[8] N. S. Khrushchov, Letter in Reply to J. F. Kennedy, October 28, 1962.

[9] N. S. Khrushchov, Replies to the Questions by the Editors-in-Chief of *Pravda* and *Izvestia*, in *Pravda*, June 15, 1963.

[10] N. S. Khrushchov, "Stalin and the Great Friendship of the Peoples of the Soviet Union", *Pravda*, December 21, 1939.

[11] N. S. Khrushchov, Speech at the 18th Congress of the CPSU(B), *Pravda*, March 15, 1939.

[12] N. S. Khrushchov and others, Letter to All the Officers and Men of the Soviet Red Army, *Pravda*, May 13, 1945.

[13] N. S. Khrushchov, "Stalin and the Great Friendship of the Peoples of the Soviet Union", *Pravda*, December 21, 1939.

[14] N. S. Khrushchov, "Stalinist Friendship Among the Peoples -- Guarantee of the Invincibility of Our Motherland", *Pravda*, December 21, 1949.

[15] V. I. Lenin, "Preface to N. Bukharin's Pamphlet, *Imperialism and the World Economy* ", *Collected Works*, Eng. ed., Progress Publishers Moscow, 1964, Vol. XXII, p. 104.

[16] V. I. Lenin, "The Urgent Tasks of Our Movement", *Selected Works*, Eng. ed., International Publishers, New York, 1943, Vol. II, p. 13.

[17] V. I. Lenin. "A Letter to the German Communists", *Collected Works*, Russ. ed., SPPL, Moscow, 1950, Vol. XXXII, p. 492.

[18] "Marx to F. Bolte", *Selected Works of Karl Marx and Frederick Engels*, Ger. ed., FLPH, Moscow, 1950, Vol. II, p. 438.

[19] "Life for the People", *Zarya Vostoka*, December 17, 1961.

[20] "Created and Reared by the Party", *Agitator*, No. 2, 1963.

[21] V. I. Chuikov, Speech at the Rally Marking the 20th Anniversary of the Great Patriotic War of the Soviet Union, *Pravda*, June 22, 1961.

[22] G. S. Titov, Speech at the 22nd Congress of the CPSU, October 26, 1961.

[23] A. N. Kosygin, Speech at the 22nd Congress of the CPSU, October 21, 1961.

[24] V. I. Lenin, "Left-Wing Communism, an Infantile Disorder", *Selected Works*, Eng. ed., International Publishers, New York, 1943, Vol. X, p. 82.

[25] Open Letter of the Central Committee of the Communist Party of the Soviet Union to all Party Organizations, to All Communists of the Soviet Union, July 14, 1963.

[26] *Ibid.*

[27] N. S. Khrushchov, Speech at the Soviet-Hungarian Friendship Rally in Moscow, July 19, 1963.

[28] M. A. Bakunin's Letter to Karl Marx, December 22, 1868, *Die Neue Zeit*, No. 1, 1900.

[29] Franz Mehring, *Karl Marx, the Story of His Life*, Eng. ed., Covici Friede Publishers, New York, 1935, p. 429.

[30] "Engels to A. Bebel, *June 20, 1873* ", *Selected Works of Karl Marx and Frederick Engels*, Eng. ed., FLPH, Moscow, 1951, Vol. II, p. 432.

[31] Karl Kautsky, *Social Democracy Versus Communism*, Eng. ed Rand School Press, New York, 1946, p. 54.

[32] *Ibid.*, p. 29.

[33] Leon Trotsky, *Stalin, an Appraisal of the Man and His Influence*, Eng. ed., Harper and Brothers, New York and London, 1941, p. 490.

[34] Leon Trotsky, "The Stalinist Bureaucracy and the Assassination of Kirov", *On the Kirov Assassination*, Eng. ed., Pioneer Publishers, New York, 1956, p. 17.

[35] Edvard Kardeli, "Five Years Later", *Borba*, June 28, 1953.

*(நன்றி: **"மாபெரும் விவாதம்"**, கேடயம் வெளியீடு, தமிழகம், ஓகஸ்ற் 1988)*

*****

www.tamilarangam.net

# தமிழ்த் தேசியவாதவாதத்தின் பார்வையும்
# குறுந் தேசியவாத வளர்ச்சியும்

## இமயவரம்பன்

குறுகிய தமிழ்த் தேசியவாதம் தன்னை நிலைநிறுத்துவதற்காகப் பல்வேறு தந்திரோபாங்களைப் பயன்படுத்தி வந்துள்ளது. இன, மொழி உணர்வுகளை வெறித்தனமான உணர்ச்சிகளாக விருத்தி செய்வது அவற்றுள் அடிப்படையான ஒரு உபாயமாக அமைந்தது எனலாம். இன்னொன்று தனக்கும் தன்னால் எதிரியாகக் கொள்ளப்படும் சமூகத் திற்குமிடையிலான வேறுபாடுகளை மிகைப்படுத்துவதுடன் பொதுவான பண்புகளைக் குறைத்துக் கூறுவது அல்லது மறுப்பதாகும். இது நம் தமிழ்த் தேசியவாதத்தின் நடத்தைக் கோளாறு மட்டுமல்ல. ஒவ்வொரு குறுகிய தேசியவாதத்தின் உள்ளும் இவ்வாறான போக்குக்களை நாம் காணலாம். இப் போக்குக்கள் மக்களைத் தனித் தனிச் சமூகங்களாகப் பிரிப்பதுடன் பகைமையை மூட்டிவிடுகிற காரியங்களாகவும் விருத்தி பெறுகின்றன. சமூகங்களிடையே நட்புணர்வு போன்றதே பகை யுணர்வும். ஒன்றின் நட்புணர்வு மற்றதன் நட்புணர்வால் ஊட்டம் பெறுவது போல, ஒன்றின் பகையுணர்வு மற்றதன் பகையுணர்வுக்கு ஊட்டமளிக்கிறது. அதன் விளைவாக ஒன்றுபடக் கூடிய வாய்ப்பை அதிகளவிற் கொண்ட சமூகங்கள் பிரிந்தும் பிளவுபட்டும் நிற்கின்றன. ஈற்றில் நன்மையடைவோர் எச் சமூகத்தைச் சேர்ந்த மக்களும் அல்லர். குறுகிய தமிழ்த் தேசியவாதத்தின் தவறான அணுகுமுறை தமிழரைப் பிற சமூகத்தினரிடமிருந்து தனிமைப்படுத்த உதவியுள்ளது. சிங்களம் மட்டுமே சட்டமாக்கப் பட்டதன் பின்பு தமிழ்த் தலைமைகள் முன்னெடுத்து வந்த சில நடவடிக்கைகளையும் குறுகிய தேசியவாதம் பிரிவினைக் கோரிக்கையாகி ஆயுதப் போராட்டமான போது கடைப் பிடித்த அணுகுமுறையின் சில வெளிப்பாடுகளையும் பற்றி இக் கட்டுரையிற் சுருக்கமாக ஆராயப்படும்.

## சுதந்திர தினம்

எந்த நேர்மையான இடதுசாரியும் இலங்கைக்கு 1948 பெப்ரவரி 4ஆம் நாளன்று சுதந்திரம் கிடைத்ததாகச் சொல்லியதில்லை. அன்று பிரித் தானியக் கொலனிய நிருவாகம் தனது நேரடியான அதிகாரத்தைத் தனது விசுவாசிகளான சில மேட்டுக்குடிகளின் கைகளில் ஒப்படைத் தது. இந்த நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்தும் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கும் உலகச் சந்தைப் பொருளாதாரம் என்ற பேரில் சமனற்ற முறையில் ஏற்றுமதி-இறக்குமதிப் பண்டப் பரிமாறலுக்கும் உட்பட்டு வந்தது. முழுமையான பொருளாதாரச் சுதந்திரமில்லாது மூன்றாமுலக நாடுகள் கொலனிய ஆதிக்கத்தின் இடத்தில் நவ கொலனிய ஆதிக்கத்தை அனுபவித்தன.

எனவே சுதந்திர தினம் என்பதிற் கொண்டாடுவதற்கு அதிகம் இல்லை என்பது சரியான ஒரு நிலைப்பாடு. ஆயினும் நேரடியான கொலனி ஆட்சி நீக்கம் என்பது நிராகரிக்க வேண்டிய ஒன்றல்ல. தொடர்ந்தும் நேரடியான கொலனிய ஆட்சியே இருக்க வேண்டும் என்பது சரியான நிலைப்பாடாகாது. நேரடியான கொலனிய ஆட்சியின் நீக்கத்தை அடுத்து நாட்டைச் சுதந்திரமாக்கும் பணி நிறைவேற்றப் படாமல் உள்ளது என்பதால் சுதந்திர தினம் பெறுமதியற்றது என்பது ஒரு விடயம். அது துக்கதினம் என்பது முற்றிலும் வேறொரு விடயம்.

நமது தமிழ்த் தேசியத் தலைவர்கள் 1956ம் ஆண்டு வரை சுதந்திர தினக் கொண்டாட்டங்களிற் பங்குபற்றினவர்கள் தான். எனவே, இடது சாரிகள் போலன்றி, 1948 பெப்ரவரி 4ஐச் சுதந்திர தினமாக ஏற்றவர் களாவர். எனினும் 1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டதன் பின்பு சோல்பரி யாப்பு தமிழரசுக் கட்சியினரால் கடுமை யான விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டதுடன் சுதந்திர தினத்தைத் துக்கதினமாக அனுட்டிப்பது என்றும் முடிவெடுக்கப் பட்டது.

1948ம் ஆண்டு மலையகத் தமிழரின் வாக்குரிமை பறிக்கப்பட்ட போது இல்லாத விதமாக, இலங்கையின் சுதந்திர தினம் என்பது மறுக்கப்பட வேண்டியதாகவும் துக்கதினமாகவும் கொண்டாடப்பட வேண்டுமென முடிவெடுக்கப்பட்டது. சுதந்திர தினக் கொண்டாட்டங்ளிற் பங்கெடுக்க மறுப்பது நமது குறைபாட்டை எடுத்துரைக்கும் ஒரு செயல்முறை. அதைப் பற்றிச் சிங்கள மக்கள் அதிகம் குற்றங் காண இடமிருந்திராது. 1957 சுதந்திர தினத்தைத் துக்கதினமாக்கிக் கறுப்புக் கொடியேற்றுவது என்ற தமிழரசுக் கட்சியின் தீர்மானத்தின் பொரு ளென்ன? தமிழரசுக் கட்சித் தலைவர்கள் சிலர் மேடையேறிப் பிரகட னம் செய்தது போல அது ஒரு துக்க தினமா?

எட்டு ஆண்டுகளாக அவர்கள் எல்லாரும் கொண்டாடிவந்த நாள் எப்படித் துக்க தினமாகும்? அந்த நாளில் அவர்களும் அவர்கள் எதிர்

பார்த்தவாறு தமிழ் மக்களும் துன்புறும் விதமாக என்ன நடந்தது? கொலனிய எசமானர்கள் பேரளவிலாவது நாட்டை விட்டுச் சென்றது தான் துன்பத்திற்குரிய நிகழ்வா?

கொண்டாட மறுப்பதை யாரும் தவறாக விளங்கிக் கொள்ள அதிகம் நியாயமில்லை. அது நாட்டின் பெரும்பான்மையினருக்கு உண்மையான சுதந்திரத்தைக் கொண்டுவரவில்லை. இவ்வாறான அணுகுமுறை இந்தியாவின் புரட்சிகர இயக்கங்களாலும் இந்தியச் சுதந்திர தினத்தையும் குடியரசு தினத்தையும் பற்றிக் கடைப் பிடிக்கப்பட்டு வந்துள்ளது. எனவே கொலனிய ஆட்சி நீக்கம் நடந்த நாள் உண்மையான சுதந்திர நாளல்ல என்பது போல, தமிழருக்கு அதனால் நன்மை இல்லை என்று கூறுவதில் நியாயமுண்டு. அது துக்கதினம் எனும் போது கொலனிய எசமானர்கட்குப் போன்று தமிழர்கட்கும் துன்பமானது என்று சொல்லப்படுகிறது என்றே சிங்கள மக்கள் கருத இடமுண்டு. சிங்களப் பேரினவாதிகளைப் பொறுத்த வரை, இது, தமிழர் பற்றிய பகையுணர்வை வளர்க்க வசதியான ஒரு வாதத்தை அவர்கட்கு எடுத்துக் கொடுக்கிறது பேரினவாதச் சிந்தனை யற்ற சிங்களவர்களின் மனதில் இது எத்தகைய உணர்வை எழுப்பும்? தமிழர் கொலனி ஆட்சி தொடர்ந்தும் இருப்பதையே விரும்புகின்றனர் என்ற எண்ணத்திற்கு அது இடமளியாதா? அதனாலேயே, இடது சாரிகள் பெப்ரவரி 4ஆம் நாளைத் துக்கதினமாக அனுட்டித்துக் கறுப்புக்கொடி ஏற்றுவதைக் கடுமையாக விமர்சித்தனர்.

திருகோணமலையில் 1957 சுதந்திர தினத்தன்று மணிக்கூட்டுக் கோபுரத்தில் கறுப்புக்கொடி ஏற்ற எடுக்கப்பட்ட முடிவு ஒரு அப்பாவித் தமிழரின் சாவுக்குக் காரணமாயிற்று. மணிக்கூட்டுக் கோபுரத்தின் அயலில் குழுமியிருந்தோரை நோக்கிச் சந்தைக்குள் இருந்து ஒருவர் சுட்டார். அதில் நடராசன் என்பவர் இறந்தார். அச் சம்பவம் திரிக்கப் பட்டு ஒரு வீரசாகசச் செயலின் போதான வீர மரணமாகக் காட்டப் பட்டது. சுதந்திர தினத்தன்று கறுப்புக்கொடி ஏற்றுவது விரைவிலேயே விடுபட்டுப் போனாலும் சுதந்திர தினத்தைக் கொண்டாடாமல் துக்க தினமாக அனுட்டிக்க வேண்டும் என்ற கருத்து தமிழரசுக் கட்சியின ரால் 1965ம் ஆண்டு அரசாங்கத்தில் பங்காளிகளாகும் வரை சொல்லப்பட்டே வந்தது.

## தேசிய கீதம்

இலங்கையின் தேசியகீதத்தை எழுதிய ஆனந்த சமரக்கோன் வங்கத்தில் சாந்தி நிகேதனில் இசை பயின்றனர். ரபீந்திர சங்கீதம் என்ற இசைமரபு வங்காளத்தின் மக்கள் இசை வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு ரபீந்திரநாத் தாகூரால் விருத்தி

செய்யப்பட்டது. அந்த மெட்டுகளின் அடிப்படையில், சமரக்கோன் தான் எழுதிய பாடலுக்கு இசையமைத்தார். அதுவே இலங்கையின் தேசிய கீதமாகத் தெரிவு செய்யப்பட்டது. 1972ல் சோதிடர்களின் ஆலோ சனைப்படி முதலடி ''ஸ்ரீ லங்கா மாதா'' என மாற்றப்பட்ட ''நமோ நமோ நமோ மாதா'' என்கிற பாடலின் சிறப்பு ஏதெனில் அதில் எந்த ஒரு இனமோ மதமோ குறிப்பிடப்படாமையாகும். நாட்டை மட்டுமே உயர்த்திப் பாடுகிற பாடல் என்ற வகையில் அதில் வரும் ''ஸ்ரீ லங்கா'' என்ற பேரை மாற்றினால் பல நாடுகட்கும் பொருந்தி வரக் கூடிய ஒரு சிறப்பான பாடல். அதைவிட, அதற்கான ஒரு தமிழ் வடிவம் அமைக்கப்பட்டு, அது அதிகார பூர்வமானதாக ஏற்கப்பட்டு முள்ளது. தேசிய கீதங்களைப் பொறுத்தவரை இது நல்லதொரு விதிவிலக்கான ஏற்பாடு. எனினும் குறுகிய தமிழ்த் தேசியவாதிகள் தேசிய கீதத்தைத் தமிழர் பாடக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்தி வந்தனர்.

அதன் விளைவாகத் தேசிய கீதத்தைத் தமிழிற் பாட உரிமை இல்லை என்ற எண்ணமே தமிழ் மக்கள் மனதில் இன்னமும் பரவலாக உள்ளது. தேசிய கீதத்தைப் பாடமறுத்த ஒரு பரம்பரை இப்போது சிங்களத்தில் தேசிய கீதத்தைப் பாடுகிறது. உரிய இடத்தில் அதைத் தமிழிற் பாடித் தமிழரின் மொழியுரிமையை நிலை நிறுத்துகிற எண்ணங்கூட எந்த முன்னாள் தமிழ் இன விடுதலை இயக்கத் தமைமையினரிடமும் இல்லை.

## சிங்களம் கற்றல்

சிங்களப் பேரினவாதம் சிங்களத்தை அரசகரும மொழியாக்கியதன் நோக்கம் தமிழரின் மொழியை அழித்துத் தமிழரைச் சிங்களவ ராக்குவதாக இருந்திருந்தால், சிங்களம் அரசகரும மொழியாக மட்டு மல்லாது கல்விக்கான மொழியாகவும் திணிக்கப் பட்டிருக்கும்.

சிங்களம் மட்டுமே என்ற கோஷம் மொழிவழி இன உணர்வைக் கிளறிவிட வசதியாயிருந்தது. வாக்குகளைப் பெற்றுத் தேர்தல்களை வெல்ல உதவியாயிருந்தது. தமிழர் சிங்களத்தைப் படித்துச் சிங்கள வருடன் போட்டியிடுவார்களேயாயின் சிங்களத்தை அரசகரும மொழி யாக்கியதன் முக்கியமான ஒரு நோக்கமே முறியடிக்கப் பட்டிருக்கும். எனினும், சிங்களம் மட்டுமே சட்டம் முழுமையாக நிறைவேற்றப் படுமானால் தமிழ் அழிந்துவிடும் என்ற வாதம், தமிழரசுக் கட்சியால் நீண்டகாலமாகவே முன்வைக்கப்பட்டு வந்ததாகும்.

ஆனால் சிங்களம் அரசகரும மொழியாக்கப்பட்ட பேரினவாத நோக்கங்களில் ஒன்று அரசாங்க உத்தியோகங்களில் தமிழரின் தொகையைக் குறைப்பதாகும். அது வெளிப்படையான பாரபட்சமாக ஒரு காலத்தில் வடிவெடுத்திருக்கும் என்பது ஒரு புறமிருக்க, சிங்க ளத்தைக் கற்க வேண்டாம் என்று தமிழரை வற்புறுத்தியதன் மூலம் தமக்கிருந்த அரசாங்க வேலைவாய்ப்புக்களைத் தமிழராகவே மறுக்கு மாறு தூண்டப் பட்டனர்.

எந்த விதமான சிங்கள மொழித் திணிப்பும் 1950களிலோ 60களி லோ 70களிலோ கூடப் பாடசாலைகளில் இருந்ததில்லை. சிங்க ளத்தை ஒரு விருப்பப் பாடமாகக் கற்பிக்கும் நடைமுறை யாழ்ப்பா ணத்தின் வசதி படைத்த பாடசாலைகள் பலவற்றில் இருந்து வந்தது. எந்த விதமான சிங்கள மொழித் திணிப்புமே இல்லாத ஒரு சூழ்நிலையில் பாடசாலைகளில் சிங்களம் கற்பிக்கக் கூடாது என்ற தடை சமூக நெருக்குவாரங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன் பெரிய அபத்தம் என்னவென்றால் சிங்களத்தைக் கற்றால், தமிழ் மொழியின் உரிமை மறுப்புக்கு இடமளிப்பதாகி விடும் என்ற வாதமாகும். தமிழரில் அரசாங்க உத்தியோகங்களில் இருந்தோர் ஒருசில சதவீதத்தினரே ஆவர். சில அரசாங்கத் துறைத் தொழில் கட்குச் சிங்கள அறிவு தேவைப்பட்டிராது. அப்படித் தேவைப்பட்ட உயர் தொழில்களில் சிங்களம் அரசகரும மொழியாக்கப்பட முன்பி ருந்த தமிழிலும் சிங்களத்திலும் குறைந்தபட்ச உரையாடல் ஆற்றல் தேவையாயிருந்தது. ஆங்கிலத்திற் கருமமாற்றிய இடத்தில் சிங்க ளத்தில் மட்டுமே கருமாற்ற வேண்டிய தேவை ஏற்படக்கூடிய சூழலிலும் அது தமிழ்ச் சமூகத்தின் கணிசமான சதவீதத்தினரைப் பாதித்திருக்க இயலாது.

சிங்களம் மட்டுமே சட்டத்தின் அநீதியான ஒரு பக்கம் இருந்தது. அதற்கெதிரான போராட்டத்தைச் சிங்கள மொழி எதிர்ப்பு என்ற வடிவத்திற் கொண்டு சென்றதன் பயனாகத் தமிழர் இழந்தது அதிகம். அந்த இழப்பின் முக்கியமான பகுதி நடுத்தர வர்க்கத்தினரை குறிப்பாக அரச உத்தியோகங்களை எதிர்பார்த் திருந்தோரையே பாதித்தது. வசதி படைத்தவர்கள் தேவைக்கேற்பச் சிங்களத்தைப் படித்தோ படிக்காமலோ தம்மை மேலும் வளப்படுத்திக் கொண்டனர்.

சிங்கள மொழித் திணிப்பு என்பது, பிற்காலத்தில், தமிழ் மொழியின் நியாயமான பிரயோகம் பற்றிய சட்டத்திற்குப் பின்பு, அச் சட்டத்தை நடைமுறைப் படுத்தாமல் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதற்குத் தடைகளை விதிக்கும் முறையில் பல்வேறு அரசாங்கத் திணைக்களங் களிலும் செயற்படுத்தப்பட்டது. வருமானவரித் திணைக்களம் குறிப்பிடத் தக்க ஒரு விலக்காக இருந்ததற்கான காரணங்கள் விளங்க எளியன

என நினைக்கின்றேன். எனினும் 1970களின் போக்கிலேயே சிங்கள மொழிப் பற்று என்பது படித்த நடுத்தர வர்க்கத்தினரிடையே குறைந்து விட்டது. அதே அளவுக்குத் தமிழ் நடுத்தர வர்க்கத்தினரிடையிலும் தமிழ்ப் பற்று நலிந்து விட்டது.

சிங்கள மொழிக்கு எதிரான தமிழ்த் தேசிய அரசியல் நடவடிக்கை தொடக்கப்பட்ட காலத்தில் தமிழ் மொழி புறக்கணிக்கப் படவுமில்லை, சிங்களம் தமிழர் மீது திணிக்கப்படவுமில்லை, தமிழர் சிங்களம் கற்க மறுத்ததைச் சிங்களப் பேரினவாதிகள் அதிகம் கவனத்தில் எடுக்கவும் இல்லை. ஏனெனில் தமிழர் சிங்களம் படிக்காமல் விடுவது சிங்களவர் களது வேலை வாய்ப்புக்கட்குச் சாதகமானது என்று அவர்கள் கண்ட னர்.

தமிழரசுக் கட்சி வெறுமனே மொழியையே பிரச்சினையாக்கிய போது, பேரினவாதம் தமிழரை அரசாங்க உத்தியோகத் துறையி னின்றும் உயர் தொழில்களினின்றும் ஓரங்கட்டுவதிலேயே குறியாய் இருந்தது. பாடசாலைகளிற் சிங்களம் கற்கும் வாய்ப்பு மறுக்கப் பட்டதன் மூலம் பொருள் வசதி குறைந்த தமிழரே நட்டப்பட்டனர். அதைவிடச் சிங்கள மக்களுடன் தமிழர் உறவுகளைப் பேணுவதற் குரிய வாய்ப்புக்களும் இழக்கப்பட்டன. பல்வேறு துறைகளிலும் தமிழ ரும் சிங்களவரும் சமூகங்களாக ஒருவரை ஒருவர் அறிய ஒரு கொலனி ஆதிக்க மொழியே பாலமாக அமைய வேண்டிய நிர்ப் பந்தத்திற்குக் குறுகிய தேசியவாதக் கண்ணோட்டங்களே முக்கிய மாகப் பங்களித்தன.

## இலங்கை என்ற பேர்

இந்த நாடு அதன் வரலாற்றில் ஈழம், இலங்கை என்ற இரண்டு பேர்களாலுமே தமிழில் பொதுவாக அறியப்பட்டு வந்துள்ளது. பிரித்தா னியக் கொலனி ஆட்சிக் காலத்தில் இலங்கை என்ற பேரே இந்த நாட்டைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லாயிற்று. சிங்களத்தில் அது லங்கா என் றும் ஸ்ரீ லங்கா என்றும் அறியப் பட்டுள்ளது. 1972ம் ஆண்டு புதிய அரசியல் யாப்பு "ஸ்ரீ லங்கா" என்ற பேரைச் சிங்களத்தில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் இந்த நாட்டைக் குறிக்கும் பேராகப் பிரகடனஞ் செய்த போதும், தமிழில் அது "இலங்கை" என்று அறியப்பட இடமளித்தது. பேரினவாதத் தன்மை கொண்டதாக அறியப்பட்ட அந்த அரசியல் யாப்பின் சாதகமான சில அம்சங்களில் இதுவும் ஒன்றாகும்.

முதன் முதலாக ஈழம் என்ற சொல்லால் தமிழ்ப் பிரதேசங்களை மட்டுமே குறிக்கும் போக்குக்கள் "தமிழ் ஈழம்" என்ற கோட்பாட்டை

ஒரு அரசியல் இயக்கமாக்கும் வரை, தமிழர் நடுவே இலங்கை என்ற பேரே இந்த நாட்டை அடையா ளப்படுத்தப் பயன்பட்டது. ஆங்கிலம் படித்தோரிடையே, தமிழர் மட்டுமன்றிப் பிறரும், ''சிலோன்'' என்ற பேரைக் கைவிடச் சில ஆண்டுகள் எடுத்தது.

தமிழ் ஈழம் என்ற தனிநாட்டுக் கோரிக்கையை வலியுறுத்தும் நோக்கில் இலங்கை என்ற பேருடன் தமிழருக்கிருந்த நெருக்கத்தை நீக்கும் நோக்குடனே இந்த நாடு வலிந்து சிறீ லங்கா என்று அழைக்கப்பட்டது. இந்தப் போக்குத் தம்மை ''இடதுசாரிகளாகக்'' காட்டிக் கொள்ள விரும்பிய இயக்கங்களையும் விட்டுவைக்கவில்லை. இலங்கை என்பதற்குப் பதிலாக ஒரு அந்நியத் தன்மை கொண்ட சிறீ லங்கா என்ற பேரால் இந்த நாட்டைக் குறித்து, அதன் மூலம் ஈழம், தமிழீழம் என்ற பேர்கள் அதனின்றும் வேறுபட்ட ஒரு மக்களையும் பிரதேசத்தையும் குறிக்குமாறு செய்ய அவர்கள் முயன்றனர்.

சிங்களப் பேரினவாதிகட்கு அது ஒரு பொருட்டே அல்ல. தமிழ் மக்கள் சிங்களப் பேரினவாதம் வேண்டுமாறு தமிழிலும் இந்த நாட்டின் பேரை ஸ்ரீ லங்கா என்று வைத்துக் கொள்வதில் அவர்களுக்கு என்ன குறை? அதே வேளை தமிழ் ஈழக் கோரிக்கையால் அடையாளப் படுத்தப்பட்ட பிரதேசங்கள் —அவை பற்றிய நிச்சயமின்மைகளும் கருத்து வேறுபாடுகளும் ஒருபுறமிருக்க— என்பன தவிர்ந்த பிரதேசங் களில் வாழும் மலையகத் தமிழரும் முஸ்லிம்களும் தாம் வாழும் நாட்டை இலங்கை என்று அழைக்க உரிமையுடையவர்களா என்ற கேள்வி எழுகிறது. இவ்வாறு ஸ்ரீ லங்கா என்ற பேரை அவர்கள் மீது திணித்த பெருமை சிங்களப் பேரினவாதிகட்கல்லாது குறுகிய தமிழ்த் தேசியவாதிகட்கே உரியதாகிறது.

## நம்மை வலியுறுத்தும் தேவை

தமிழர் தமது உரிமைகளையும் தாம் பங்கு கோர வேண்டிய வற்றையும் மறந்துவிடுவதால் தமிழீழக் கோரிக்கை எவ்வளவு தூரம் வலுப் பெற்றுள்ளது என்று என்னால் நிச்சயமாகக் கூற முடியாது. ஆனால் அது கணிசமான வெற்றி என்று கூறமாட்டேன்.

புலம் பெயர்ந்தோரிடையே சிங்கள மக்களை எதிரிகளாகவும் இந்த நாட்டை அடையாளப்படுத்தும் அனைத்தையுமே அந்நியமானதாகவும் கருதும் போக்கை மேற்கூறிய விதமான அணுகுமுறைகள் ஊக்கு வித்து உள்ளன. அதன் மூலம் தமிழ் மக்களின் விடுதலைப் போராட் டம் சாதித்ததென்ன?

இலங்கைக்குள்ளே தமிழீழப் பிரிவினை பற்றிய நம்பிக்கை சோர்ந் துள்ளது ஒரு புறமிருக்க, உரிமைப் போராட்டத்திற் கூட நம்பிக்கை யற்ற ஒரு மனநிலை தான் இன்று காணப்படுகிறது. இந்த நிலையில், தமிழ் மக்களிடையே தாம் இழந்த, இழந்துவரும் உரிமைகளையும் அவற்றை வெல்ல முன்னெடுக்க வேண்டிய போராட்டங்களையும் பற்றி உணர்வூட்டும் தேவை இருக்கிறது. இதுவரை காலமும் முன்னெடுக்கப் பட்ட போராட்டங்கள் நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்தை முற்றாக நிராகரித்தும் பிற தேசிய இனங்களின் தேவைகள் பற்றிய அக்கறை யின்றியும் முன்னெடுக்கப்பட்டன. ஒரு வகையில், இவை ஒரு அதிகார மனப்பான்மையுடன், ஒரு ஆண்ட பரம்பரைத் திமிருடன், பெரும் பான்மை இனமொன்றுக்கு உரியதான கண்ணோட்டத்துடன் முன்னெ டுக்கப்பட்டன என்றே கூற வேண்டும். ‘‘தனித் தமிழ் ஈழம் என்பது தமிழரின் உரிமை, அதை மற்ற அனைவரும் ஏற்றே தீரவேண்டும்’’ என்ற மனப்பான்மை உருவாகி வளர்ந்ததற்குரிய கார ணங்கள் பல, தமிழ் மேட்டுக்குடி அரசியலில் காணப்படக் கூடியன.

தமிழ் மக்களின் விடுதலை அவ்விதமான மேட்டிமைத்தனத்தில் இருந்தும் தமிழரைப் பிற சமூகங்களிலிருந்தும் விலக்கி வைக்கும் போக்குகளிலிருந்தும் விடுபட வேண்டும். அற்பத்தனமான சிந்தனைகள் ஒரு திசைக்கு மட்டும் வரையறுக்கக் கூடியவையல்ல. அவை வேறு திசைகளிலும் இயங்கிச் சமூகத்தின் உள் முரண்பாடுகளையும் கூர்மை யடையச் செய்ய இயலும். செய்தும் உள்ளன. தமிழ் மக்கள் எதிர்ப்பது பேரினவாத ஆதிக்கச் சிந்தனையையும் சிறுபான்மைத் தேசிய இனங்களின் புறமொதுக்கலையுமே என்றால், அவர்களது செயற்பாடுகள் அந்த ஆதிக்கச் சிந்தனைகளையும் புறமொதுக்கல் களையும் மறுக்கும் நோக்கைக் கொண்டவையாகவும் இந்த நாட்டினில் நமது உரிமைகளை வலியுறுத்து வதுமாகவே அமைய வேண்டும்.

(*நன்றி:* ***புதியபூமி*** *யூன்-யூலை; ஒகஸ்ற் 2010*)

*****

www.tamilarangam.net

# வன்னியில் மலையகத்தார்

## *மணி*

*தொட்டதெல்லாம் தங்கமுன்னு*
*கங்காணியான் பேச்சை நம்பி*
*பொழைப்புத் தேடி பொறப்பட்டோமே*
*தங்க ரத்தினமே – நம்மை*
*தோணி ஏற அனுப்பி வெச்சான்*
*பொன்னு ரத்தினமே*

*கண்டிக்குத்தான் போறமுன்னு*
*கறி சோறு துன்னுப்புட்டு*
*தோணி ஏற மாட்டமுன்னா*
*தங்க ரத்தினமே – அவன்*
*தொலைச்சுடுவான் ஆளை வச்சி*
*பொன்னு ரத்தினமே*

*ஊரான ஊரிழந்து*
*ஒத்தைப் பனைத் தோப்பிழந்து*
*கண்டிச் சீமைத் தோட்டத்திலே*
*தங்க ரத்தினமே – என்னெ*
*பெத்த தாயை நான் மறந்தேன்*
*பொன்னு ரத்தினமே*

*பரதேசியின்னு சொல்லி*
*பறிச்சானே குடியுரிமை*
*தட்டிக்கேக்க யாருமில்லே*
*தங்க ரத்தினமே – நம்ம*
*தலைவனெல்லாம் திருட்டுப்பய*
*பொன்னு ரத்தினமே*

*மாவில்லே அரிசியில்லே*
*அரைவயிறு தீனியில்லே*
*நடுத்தெருவில் நிறுத்தினானே*
*தங்க ரத்தினமே – நம்ம*
*தோட்டத்திலே தொழிலுமில்லே*
*பொன்னு ரத்தினமே*

*வன்னியிலே குடியேறி*
*காடழிச்சு வயலுழுது*
*வாழவுன்னு போயிருந்தோம்*
*தங்க ரத்தினமே – நம்ம*
*போட்ட கணக்குப் பொய்யாச்சுதே*
*பொன்னு ரத்தினமே*

*மேட்டுக்குடித் தொரைகளோடே*
*காலாகாலம் மல்லுக்கட்டி*
*பொழைச்சிருந்தோம் ஒருபடியா*
*தங்க ரத்தினமே – கெட்ட*
*போரு வந்து கெடுத்திடுச்சே*
*பொன்னு ரத்தினமே*

*புள்ளபுடி காரனுங்க*
*பட்டாளத்தான் தொல்லையெல்லாம்*
*தாங்கிக்கிட்டு தவிச்சிருந்தோம்*
*தங்க ரத்தினமே – சண்டை*
*முடிஞ்சும் ஒரு வழியில்லையே*
*பொன்னு ரத்தினமே*

*முள்ளுக்கம்பி வேலிக்குள்ளே*
*முழுவருசம் முடக்கி வெச்சு*
*வெளிய வுட்டு வெரட்டரானே*
*தங்க ரத்தினமே – கேக்க*
*வழியில்லாமெத் தவிக்கிறோமே*
*பொன்னு ரத்தினமே*

*ஊரான ஊரிழந்தோம்*
*உள்ளதெல்லாந் தானிழந்தோம்*
*இழப்பதற்கு ஏதுமில்லை*
*தங்க ரத்தினமே – இனி*
*உடைக்க வேணும் விலங்குகளை*
*பொன்னு ரத்தினமே*

***(நன்றி: http://thulaa.net)***

# ஒரு சிறுமியின் கதை

## டெனிஸ் ப்ரூடஸ்*

*முன்பு*
*பின்னிவிட்ட கூந்தல்*
*மற்றவர்களைப் பார்த்து*
*வானை நோக்கி உயர்த்தி*
*மடக்கிய கைகள்*
*எட்டு வயதான சிறுமியென்று சொன்னார்கள்!*

*பின்னொரு நாள்*
*ஒரு சிவப்புக் கலவை*
*சிதறிய மாமிசத் துண்டங்கள்*
*காற்றில் படபடக்கும்*
*கந்தைத் துணி*
*பூப் போட்ட சட்டையணிந்த*
*முன்னை நாள் சிறுமியென்று சொன்னார்கள்!*

[*Dennis Brutus, (இப்போதைய ஸிம்பாப்வேயான) றொடீஷியாவிற் பிறந்தவர். தென்னாபிரிக்காவுக்குப் பெயர்ந்து நிறவாதத்திற்கெதிரான இயக்கத்தில் பங்குபற்றிச் சிறை சென்றவர்.
கவிதை, ஜொஹானஸ்பேர்க் புறநகர்ப் பகுதியான ஸொவேற்றோவில் 1976இல் ஆர்ப்பாட்டமொன்றிற் பங்குபற்றிப் பொலிஸ் வன்முறையில் இறந்த ஒரு சிறுமியைப் பற்றியது.]

*(நன்றி: ஆபிரிக்கக் கவிதை (தமிழாக்கம்), சோ. பத்மநாதன், இணுவில் கலை இலக்கிய வட்டம் 2001)*

*புதிய-ஜனநாயக மாக்சிய-லெனினிசக் கட்சிக்கு நிதி உதவ விரும்புவோர் பின்வரும் வங்கிக் கணக்கிற்கு வழங்கி உதவலாம்.*

***K. Senthivel அல்லது V. Mahendran, Account Number 1570018335 Commercial Bank, Grandpass Branch, Colombo 14, Sri Lanka***